தென்மொழி

வருந்துழல் நெஞ்சமே!

மொழிக்கும் இனத்திற்கும் நாட்டிற் கும்-என
முழுமையாய்ச் செய்திடப் பலநூறு இருக்கையில்,
பழிக்கும் பேச்சுக்கும் சூளுரைக்கும் — எனப்
பாழாய்க் காலத்தை வீணடிக் கின்றனர்!
ஒழிக்கும் முனைப்பில் ஒருவருக் கொருவர்
ஒவ்வொரு நொடியிலும் தாழ்ந்திழி கின்றனர்!
அழிக்கும் பகைவரோ தமிழினம் சிதைவதை
அன்றன்றும் மகிழ்ச்சியோ டெதிர்பார்த் திருப்பரே!

இருந்த பேரின இழப்பை மீட்பதா?
எதிரியின் சூழ்ச்சிக்கே இருகண் விழிப்பதா?
மருந்துரை தந்தெம்மின் மக்களைக் காப்பதா?
மற்றெந் தலைவரை மனந்தெருட் டுவதா?
திருந்துமா செந்தமிழ்ப் பேரினம்? முந்தைநாள்
திசையெட்டும் சிதைந்தவர் வந்துகூ டுவரோ?
வருந்துழல் நெஞ்சமே! வழியொன்று சொல்லையோ?
வாழ்நாள் முழுதுமே முயற்சியில் கழிப்பையோ?

வடி: 18
ஒலி: 11
விலை உருபா 1-25
ஆசிரியர் பெருஞ்சித்திரனர்

www.thamizham.net - Free E book No 7522

நமக்கு வந்த மடல்கள்.

0 : 928 : அறிவார்ந்த ஐயா! தலைதாழ்ந்த வணக்கங்கள்! தென்மொழி (சுவடி 18; ஓலை 10) கண்டேன். தமிழீழ விடுதலை மறவர்களுக்குத் தக்க அறிவூட்டும் கட்டுரைத் தொடரும், சிறப்பு மடலும் கண்ணுற்றேன். தமிழனைத் தாழ்த்த, தமிழன் தான் முயற்சி செய்வான் என்பது காலத்தால் அழியாத கதையாய்த் தொடர்வது என்போலும் சிறுவர்களுக்கு மிகுதுயர் தருவது. "என்னைப் பற்றி நானே கேள்விப் படுவது" என்னுந் தலைப்பில் வரைந்தவை கண்டு துணுக்குற்றேன். இப்படிப்பட்ட முட்டாள்களும் நண்பர் போலப் பழகுகிறார்களோ என்பதே என் துயரம். தங்கள் சிந்தனைக் கூட்டை அவர்களின் எண்ணம் தாக்கவே கூடாது.

— கதிர்குன்றன், அமரர் பூண்டி.

0 : 929 ; பேரன்பின் இனிய ஐயா அவர்களுக்கு வேலிறையனின் வணக்கங்கள். கடந்த இரு தென்மொழி ஆசிரிய உரைகள் பழைய தென்மொழிகளை நினைவூட்டுவனவாக அமைந்திருந்தன. உ. த. மு. கழகத்திற்கென தனிஇதழ் வெளிவர இருப்பதும் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. — வீ. செ. வேலிறையன், வீ. க. வலசு.

0 : 930 : அன்புள்ள ஐயா, உ. த. மு. கழகத் தலைமையிலிருந்து ஓர் அமைப்பை உருவாக்கிக் கொண்டிருக்கும் தாங்கள் பிற இயக்க மாநாடுகளில் கலந்து உரையாற்றுவது சரியன்று. தி. க. வின் கொள்கைகள் சில நமக்கு உடன்பாடெனில் அதையும் நம் மேடைகளிலேயே வலியுறுத்தலாம். எடுத்துக்காட்டாகச் சாதி ஒழிப்புத் தேவை என வலியுறுத்தும் அவர்கள் சாதிக்கு ஒரு நயன்மை (நீதி) கேட்கிறார்கள். சாதி ஒழியும்போழ்து பார்த்துக் கொள்ளலாம் சாதி ஒழியும் வரை நயமை (நீதி) வேண்டும் என்கின்றனர். சாதியின் பேரால் அரசுப்பணி, கல்விச்சலுகை, தொழில் துறையில் அரசின் பொருளுதவி இப்படி இன்னும் விரிந்து கொண்டே போனால் சாதியை மக்கள் கைவிடாமல் சலுகைகளுக்காகக் கெட்டியாக பிடித்துக் கொள்வார்களே தவிர சாதியை ஒருபோதும் கைவிடமாட்டார்கள்.

மதம், இறைமறுப்புக் கொள்கை, 'இறைவன் இல்லை; இறைவனை உண்டு பண்ணியவன் முட்டாள், காட்டு விலங்காண்டி' எனக் கூறுவோர், இல்லாத இறைவனுக்கு அந்த மதத்திலிருக்கும் (இந்து) எல்லாப் பிரிவினர்க்கும் (சாதிக்கும்) கோவிலில் மணியடிப்பதற்கு உரிமை வேண்டும் என்று கேட்பதும் போராடுவதும் மதத்தையும், இறைவனையும் ஏற்றுக் கொள்வதாகத்தானே ஆகும். மணியடிக்கும் உரிமை கிடைத்து விட்டால் நாட்டில் உண்மையாகவே சாதிகள் ஒழிந்து விடுமா? எந்தக் கொள்கைகளை ஏற்று அங்குச் சென்று சொற்பெருக்காற்றுகிறீர்கள்? — வெ. திருப்பாற்கடல், வள்ளியூர்.

0 : 931 : பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு நலம். நலத்துடனும், வளத்துடனும் தாங்கள் நெடுங்காலம் வாழ்ந்து இன,மொழித் தொண்டு செய்து,பெருமையுற,

(தொடர்ச்சி [illegible] பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7522

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ்மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், (சிங்கை).
தென்மொழி மறை. நித்தலின்பனார், தென்மொழி ந. முத்துக் குமரனார்
தென்மொழி ப. துரையரசன், தென்மொழி. நா. இளமாறன்.
அமைச்சர் : அழ. இளமுருகன். அறி. இ.
(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 18] தி. பி. ௨0௧௩ ஆடவை (சூன்-சூலை 82) [ஓலை: 11

அருவருப்பான அரசியல் போக்குகள்!

பலவகையான உழைப்பிற்கும், தன்னலமற்ற தொண்டிற்கும், ஈகத்திற்கும் அடிப்படையான அரசியல் ஈடுபாடுகள், இன்று கொடுமைக்கும், அடிதடிக்கும், கொலைகளுக்கும், கையூட்டிற்கும், போலித்தனத்திற்கும், ஆரவாரத்திற்கும், விளம்பர வெறிக்கும், ஏமாற்றுக்கும் நிலைக்களனாகி, நாட்டைச் சீர்குலைத்து வருகின்றன! அறனிழுக்காது அல்லவை நீக்கி, மறனிழுக்கா மானம் உடையது அரசு' என்னும் அரசியல் இலக்கணத்திற்கே மாறுபட்டு விளங்குகிறது இற்றைய இந்திய அரசியல்.

www.thamizham.net - Free E book No 7522

'மறனிழுக்கா மானம்' என்ற பேச்சுக்கே இன்று அரசியலில் இடம் இல்லை. மானம் இல்லாதவர்களே இன்று அரசியல் அரங்கத்தில் ஆளுமை செய்கின்றனர்.

எங்கு நோக்கினும் கொலைகள், கொள்ளைகள், வழிப்பறிகள், வைப்பகங்களில் திருட்டுகள், பேருந்து வண்டிகளின் மோதல்கள், தொடர் வண்டி விழ்ச்சிகள், வானூர்திக் கடத்தல்கள், கட்சிச் சண்டைகள், சாதிச் சண்டைகள், குழுச்சண்டைகள், தீவைப்புகள், துமுக்கி (துப்பாக்கி)ச் சூடுகள், மாணவர், வணிகர், உழவர், தொழிலாளர் போராட்டங்கள், கோரிக்கைப் போராட்டங்கள் முதலியவை வேறுபாடின்றி இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன. அண்மையில் 'உத்தரப்பிரதேச' முதல்வரே, அம் மாநிலத்திலுள்ள கொள்ளையர்களை அடக்க இயலாமையின் பொருட்டு, வேலை விடுப்புச் செய்துள்ள இரக்கமான செய்தி, நாடே நாணத் தக்கதாக உள்ளது. பெண்களைக் கற்பழிக்கும் காட்டு விலங்காண்டித் தனம் மாணவர்களிலிருந்து ஆட்சிப் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் அமைச்சர்கள் வரை பற்றியிருக்கின்றது. ஒவ்வொருநாளும் வெளி வரும் செய்தித்தாள்கள் எல்லாவற்றிலும் இக் கொடுமையான செய்திகளே பெரும் பகுதியான இடங்களை அடைத்துக் கொள்கின்றன. மீதி இடத்தின் சில பகுதியைப் பெண்களின் அருவருப்பான அரை அம்பணப்படங்களே ஆட்கொள்கின்றன. எஞ்சியுள்ள ஓரிரு பக்கங்களின் சில பகுதிகளில போலித்தனமான, ஏமாற்றுத்தனமான, பொய்யான கவர்ச்சிமிக்க வணிக விளம்பரங்களே வெளியாகின்றன. இவ்வாறான போலிக் கவர்ச்சிகள், விளம்பரப் பரப்புதல்கள், வரவேற்பு, வழியனுப்பு ஆரவாரச் செய்திகள், கலைத்துறை, கல்வித் துறை, அறிவுத்துறை, அரசியல் துறை, பொருளியல்துறை, மொழித் துறை, குமுகாயத்துறை, இனத்துறை, மதத்துறை, மத மறுப்புத் துறை, உரிமைப் போராட்டத் துறை, சீர்திருத்தத்துறை முதலிய அத்தனைத் துறைகளிலும் அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்து கொழிக்கின்றன.

சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் அடிக்கடி வெளிநாடுகளுக்குச் செல்லுவதும், திரும்புவதும் பெரிய பெரிய ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளாகவும், செய்தித்தாள்களில் அவரவர்களால் நன்மை பெறும் வணிகர்களாலும், தொழில் முதலாளிகளாலும், தனிப்பட்ட அரசியல் ஈடுபாடு கொண்டவர்களாலும், ஒரு பக்க, அரைப்பக்க விளம்பரங்களாகவும் வெளிவருகின்றன. தலைநகரிலும் சுற்றுப்புற ஊர்களிலும், எங்குப் பார்த்தாலும், குட்டிச் சுவர்கள் உட்பட, வரவேற்புச் சுவரொட்டிகளும், வாழ்த்துச் சுவரொட்டிகளும் பெரிய அளவிலும், அருவருப்பான கோணங்களிலும், அரைகுறை உடைகளுடன் பெண்களின் படங்கள் அச்சிடப்பட்ட வண்ண வண்ணச் சுவரொட்டிகளும், அரசியல், கட்சிக் கூட்டங்கள், மாநாடுகள் இவைபற்றிய

www.thamizham.net - Free E book No 7522

விளம்பரச் சுவரொட்டிகளும், சுவர்கள் என்ற அடையாளமே இன்றி ஒட்டப்பட்டு, நாடே அலங்கோலப்படுத்தப் படுகிறது. நகர்களில் சுவரொட்டி ஒட்டப் பெறாத சுவரும், சுவரின் பகுதியுமே இல்லாத வாறு, பெரிய பெரிய, சுவர் அளவான சுவரொட்டிகளும் அவற்றி லுள்ள கவர்ச்சிப் படங்களும் போவோர் வருவோரை நிலைதடுமாறச் செய்கின்றன. எதற்கெடுத்தாலும், விளம்பரச் சுவரொட்டிகளும், அறிக்கைகளும் நாடு நகரங்களையே குப்பைத் தொட்டிகளாக ஆக்கி வருகின்றன. முதலமைச்சர்க்கு வேண்டிய ஒருவரின் வீட்டுத் திருமணத்திற்கு வருகை தந்த முதலமைச்சர்க்கு நன்றி தெரிவிக்கும் வகையில், அம் முதலமைச்சரின் படத்துடனும், அவ்வரசியல் குட்டித் தலைவரின் படத்துடனும் பெரிய அளவில், வண்ணத்தில் அச்சிட்டு ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் அண்மையில் நகர் முழுவதும் உள்ள சுவர்கள் எங்கும் காட்சியளித்தன. சென்னையிலுள்ள சாலைகளின் ஓரங்களில் எல்லாம் உயர்த்துக் கட்டப்பட்ட பெரும் பெரும் திரைப் பட வண்ண வரைபடங்களும், அவற்றிலுள்ள அருவருப்புப் பெண் ஓவியங்களும், தமிழ்நாட்டுக்கு வரும் வெளிநாட்டுக்காரர்களும் வெட்கித் தலைகுனியும் வண்ணமாகவும், நாட்டில் திரைப்படப்பிடிப்பு களைத் தவிர வேறு தொழில்களே நடைபெறுவதில்லையோ என்று எண்ணும்படியாகவும், கண்களை அராவும் காட்சிகளாக இருப்பதை எப்பொழுதும் காணலாம்.

உயர்ந்த பண்புகளுக்கும், நேர்மைக்கும் இடமாகவிருந்த தமிழ் நாட்டில் 'எங்கும் எதிலும் தமிழ்' என்பது குறைந்து, 'எங்கும் எதி லும் அரசியல் அல்லது ஊழல்' என்னும் போக்கு அதிகமாகிவருவது மிகவும் கவலை தருவதாக உள்ளது. ஊழல்களும் கையூட்டுகளும் அடித்துப் பிடுங்குதல்களும், அடாவடித்தனமாகப் பொதுமக்களை அச்சுறுத்திப் பணம் பறித்தல்களும், முன்பு இருந்தன போல் நூறு மடங்கு பெருகியிருக்கின்றன. திரைப்படக் கொட்டகைக்கு முன் சீட்டுகள் வாங்கி ஐந்துமடங்கு, பத்துமடங்குக் கூடுதல் விலைக்கு விற்பதுபோல், தொடர்வண்டிகளில் துண்டு விரித்து இடங்காட்டி மிகு பணம் பிடுங்குவது போல், பெரிய உணவு விடுதிகளில் உண் ணும் மிசைகளின் மேல் உணவுப் பொருள்களின் உயர்விலைப் பட்டி யல்கள் வைக்கப் பட்டிருப்பது போல், உணவுப் பங்கீட்டு விற்பனைக் கடைகள், கல்விக் கூடங்கள், அரசு அலுவலகங்கள் பணியமர்த்த அலுவலகங்கள் முதலிய எங்கும் மலிவுவிலை உணவுப் பொருள்களும், பள்ளி நுழைவு, கல்லூரி நுழைவு, பட்டங்கள், சான்றிதழ்கள், உரி மங்கள், அரசுப் பணிகள், பதவிகள் அனைத்தும் பட்டியலிட்டு மிகு விலைகூவி விற்கப் பெறுகின்றன. அவ் விலைப்பட்டியல்கள் அதிகாரி களின் கைகளிலும் அமைச்சர்களின் சட்டைப்பைகளிலும் இருப்பது தான் கொடுமையிலும் கொடுமை! பொறியியற்கல்லூரி, மருத்துவக் கல்லூரி நுழைவுகள், மேற்படிப்பு நுழைவுகள், கலைக்கல்லூரிப் படிப்புகள், பண்டாரகர் பட்டங்கள், கடை வாணிக, இறக்குமதி

www.thamizham.net - Free E book No 7522

ஏற்றுமதி உரிமங்கள், அரசின் வீட்டு வாய்ப்பு, வாடகை வீடு, விற்பனை, நில, வீட்டு ஒதுக்கங்கள் முதலிய அனைத்தும் பத்தாயிரம் முதல் ஐம்பதாயிரம் உருபா வரை நேரிடையாகவும் மறைமுகமாகவும் விலை போகின்றன.

அரசுச் சார்பில் வேடிக்கை விழாக் கொண்டாட்டங்கள், பாராட்டுப் பரிசளிப்பு நிகழ்ச்சிகள், மாநாடுகள் போன்றவை நாள்தோறும் நடத்தப் பெறுவதும், அமைச்சர்கள் எனப்பெறுவோர் அவற்றில் கலந்து கொள்ளவும் தலைமை தாங்கி நடத்திக் கொடுப்பதற்காகவுமே தேர்தலில் போட்டியிட்டு வந்தவர்கள் போல், நாட்டு நடப்புகள், இலக்கியத் திறப்பாடுகள், பாட்டரங்குகள், பட்டிமன்றங்கள் முதலியவற்றில் பகடியாகவும், ஏளனமாகவும், கிண்டலாகவும், நக்கலாகவும் மற்றக் கட்சியினரைப் பற்றிப் பேசுவதையும் கருத்தறிவிப்பதையும் நோக்குமிடத்து, எங்கு எதிர்காலத்தில் ஆட்சிக்கு வருவோர்க்கு இவையே இலக்கணங்கள் ஆகி விடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது!

அண்மையில், இக்கால் உள்ள அமைச்சர்களில் ஒருவர், முன்னாள் முதல்வரை, இளஞ்சுட்டி, குருதி ஆய்வு செய்தது போல், கீழ்மையாகவும் பண்பாட்டுக் குறைவாகவும் கருத்துக் கூறியதும், அதற்கவர் சூளுரை செய்ததும், பின் அது தளர்ந்து போனதும் இன்றுள்ள அக்கறையற்ற, ஆரவார, அருவருப்பான அரசியல் போக்குக்குச் சரியான எடுத்துக் காட்டுகளாகும்! மக்களுக்குக் கஞ்சி வார்க்க வந்தவர்கள் கலயத்துக்குப் போராடிக் கஞ்சிப் பானையை உடைத்தது போல், திருமணத்தில் அடுப்பு மூட்டுவதில் சண்டை போட்டுப் பந்தலைக் கொளுத்தியது போல், விருந்து பரிமாறும் போட்டியில் விருந்தாளிக்கு விளக்கு மாற்றுப் படையல் கிடைத்தது போல், ஒட்டடை அடிக்க வந்தவன் வீட்டுக் கூரையை இடித்து வீழ்த்தியது போல், ஊராள வந்தவர்கள், ஆளப்பட வேண்டிய மக்கள் அருவருப்புற்று வேடிக்கை பார்க்கவும், தலையிட்டு விலக்கி விடவும் வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளாக்கப்படும் வகையில், தம்முள் தாயாதிச் சண்டையில் ஈடுபடுவதைவிட ஓர் இழிவான, அருவருப்பான அரசியல் இனி இருக்குமோ? எதிர்காலந்தான் விடை சொல்ல வேண்டும்!

— **பெருஞ்சித்திரனார்**

எதிர் பாருங்கள்!

“உலகம் எப்படி, அப்படிப்
பட்டோர் நிலைகொள் **கொய்யாக்கனியே!**”

— புரட்சிப் பாவலர் **பாரதிதாசனார்.**

பாவலரேறு **பெருஞ்சித்திரனாரின்** தொடக்கக் காலத் தமிழ்ப் பாவியம் “கொய்யாக்கனி” அச்சாகிக் கொண்டுள்ளது. விரைவில் விற்பனைக்குக் கிடைக்கும்.

— **அமைச்சர்.**

www.thamizham.net - Free E book No 7522

கழக முதல்வரின் பொறுப்பு அமர்த்தச் சுற்றுச் செலவு - 3

உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், கழக அமைப்புகளில் மாவட்ட, வட்டப் பொறுப்பாளர்களை அமர்த்துதல் தொடர்பாகக் கீழ்க்காணும் திட்டப்படி, சுற்றுச் செலவு மேற்கொள்ள விருக்கிறார்கள். அவ்வமயம் மாவட்டங்களில் உள்ள தென்மொழி அன்பர்களும், கழகத்தில் ஈடுபாடு கொள்ள விரும்பும் தமிழன்பர்களும், ஆர்வலர்களும ஐயா அவர்களைக் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நாள், நேரங்களில் நேரில் வந்து பார்த்துக் கலந்துரையாடலிலும், பொறுப்பமர்த்தத் தேர்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

சென்னை-5
1—7—82

தென்மொழி ப. துரையரசன்.
கழக அமைப்புச் செயலாளர்.

இடம்: அவ்வவ்வூர் வழிப்போக்கர் விடுதி (Travaller's Bungalow)

மாவட்டம்,	ஊர்	நாள்	நேரம்
1. மதுரை மேற்கு	—திண்டுக்கல்	24-7-82	காலை 9 முதல்
2. மதுரை கிழக்கு	—மதுரை	25-7-82	மாலை 6 வரை
3. முகவை கிழக்கு	—இராமநாதபுரம்	26-7-82	,,
4. நெல்லை கிழக்கு	—தூத்துக்குடி	27 7-82	,,
5. குமரி மாவட்டம்	—நாகர்கோயில்	28-7-82	,,
6. நெல்லை மேற்கு	—தென்காசி	29-7-82	,,
7. (கழக வேலை)	—சிவகாசி	30-7-82	,,
8. முகவை மேற்கு	—விருதுநகர்	31-7-82	,,

(பி கு) ஒருவேளை, ஒதுக்கப்பட்ட நாளில் வழிப்போக்கர் விடுதி (பயணியர் விடுதி) கிடைக்க வில்லையானால், வேறு தங்குமிடத்தை, அன்பர்கள் அவ் விடுதியில் வந்து கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

தமிழ் நாள்காட்டி

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு!

அழகிய தமிழ் எண்களுடன் தமிழ் மாதப் பக்கல்களும், தமிழ் திரிந்த நடைவழக்கு எண்களுடன் ஆங்கில மாதப் பக்கல்களும், ஒவ்வொரு மாதத் தாள்களிலும் தமிழ், தமிழின, தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்குரிய கொள்கை மொழிகளும் குறிக்கப் பெற்று, வரும் திசம்பர் முதற்கிழமையிலேயே விற்பனைக்குக் கிடைக்கும்படி அழகிய படத்துடன் கூடிய நாள் காட்டி வெளிவருகிறது.

விலை விளக்கம் பின்னர்.

தேவையானவர்கள் முன்கூட்டியே எழுதுக

விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு கொடுக்கப் பெறும்.

www.thamizham.net - Free E book No 7522

செய்திகள்

1) கார்வண்ணன் — கண்ணகி வாழ்க!

சென்ற விடை கக (2-6-82) அறிவன் காலை 7 மணியளவில், சின்ன காஞ்சிபுரம், சுக்கிள பாளையத்தில், உறைத்த தென்மொழித் தொண்டரும், உ. த. மு. க. வடவார்க்காடு (வடக்கு) மாவட்டத் தலைவரும், வேட்டாங்குளம் ஆசிரியரும் ஆகிய உயர்திரு மா. செ. தமிழ்மணி அவர்களின் அளியர் செல்வன். மு. கார்வண்ணனுக்கும் செல்வி. ப. கண்ணகிக்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் தமிழ்த்திருமணம் இனிதே நடைபெற்றது. நெமலி ஆசிரியர் திரு. மு. கதிரவன் வரவேற்புரை நிகழ்த்தினார். சொல்லாய்வறிஞர் ப. அருளி வணி. இ; ச இ; புலவர் குமர. தன்னொளியன் க. மு., கல். மு., திருவாளர்கள் அ. ப. கிருட்டிணசாமி, புன்செய் வில்லவன், க. கிருட்டிணன், சி. செயராமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திரு. மா. செ. தமிழ்மணி நன்றி கூறினார். இனிய திருமண விருந்துடன் விழா இனிது நிறைவுற்றது.

2 பாவேந்தர் பாரதிதாசன் விழா — சோழலிங்கபுரம்

கடந்த 3-6-82 மாலை 7 மணியளவில், சோழலிங்கபுரம், பெரிய தெருவில், புரட்சிப் பாவேந்தர் கனகசுப்புரத்தினம் (பாரதிதாசன்) அவர்களின் 92-ஆவது பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டம் பெரியார் சம உரிமைக் கழகத்தால் நடத்தப் பெற்றது. வரவேற்புரையைத் திரு. குப்பன் அவர்கள் நிகழ்த்தினார். நிகழ்ச்சிக்குத் திரு. செம்பரிதி அவர்கள் தலைமையேற்றார். முனைவர் திருவாட்டி த. சு. மெய்யம்மை (சத்தியம்) அவர்கள் உணர்வுரைக்குப்பின், சொல்லாய்வறிஞர் திரு. ப. அருளி வணி. இ; ச. இ. அவர்கள் பாவேந்தரையும் பாரதியாரையும் ஒப்பிட்டு ஆய்வுரை ஒன்று நிகழ்த்தினார். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் சிறப்புரை நிகழ்ந்தது. நிகழ்ச்சி இரவு 10 மணியளவில் முடிவுற்றது.

3) இராசு — கமலம் வாழ்க!

தென்மொழியன்பர், செல்வன் கா. இராசு, செல்வி. சி. கமலம் ஆகியோர் திருமணம், கடந்த 4-6-82 வெள்ளி காலை 8 மணியளவில், சோலையார் பேட்டை, தொடர் வண்டித் துறை கலையரங்கத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையிலும், சங்கை க. சி. ஏசுதாசன் அவர்கள் முன்னிலையிலும் இனிதே நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி வ. ஆ. மாவட்ட, தி. க. துணைத்தலைவர் திரு. க. க. சின்னராசு, வழக்குரைஞர்கள் ஏ. இப்ருகிம், ஆ. இராதா கிருட்டிணன், வ. இரா. சண்முகம், பி. வேணு, அங்கமுத்து, புலவர். ந. அண்ணாமலை, சொல்லாய்வறிஞர் திரு. ப. அருளி ஆகியோர் நல்லுரை வழங்கினர். தலைவர் நிறைவுரைக்குப்பின், மணமகன் திரு. கா. இராசு அவர்களின் நன்றியுரையுடனும் இனிய நல்விருந்துடனும் மணவிழா நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

www.thamizham.net - Free E book No 7522

4) தி. க. மாநில மாநாடு — திருச்சி :

கடந்த 12, 13-6-82 காரி, ஞாயிறு ஆகிய நாட்களில், திருச்சி ஒத்தக்கடைத் திடலில் திராவிடர் கழகத்தின் மாநில மாநாடு சீரும் சிறப்புமாக நடைபெற்றது. முதல் நாள் திராவிடர் கழக 'தாழ்த்தப்பட்டோர் — மாநில மாநாடும், இரண்டாம் நாள் பிற்படுத்தப்பட்டோர் உரிமைக் காப்பு மாநாடும்' நடைபெற்றன. முதல் நாள் மாநாட்டிற்கு, தி. க. பொதுச் செயலாளர் கி. வீரமணி தலைமை தாங்கினார். திருவாளர்கள் கா. மா. குப்புசாமி, கோ. சாமிதுரை, இராமலக்குமி சண்முகநாதன், ஆகியோர் பங்கு கொண்டனர். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, அன்னை நாகம்மையார், அன்னை மணியம்மையார், புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன், பர். அம்பேத்கார், ஈழத்தந்தை செல்வநாயகம் ஆகியோர் படங்களை முறையே, பேரா. க. அன்பழகன், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், நாகை முருகேசன், அன்பில் தருமலிங்கம், பேரா. ந. இராமநாதன் பேரா. கு. வெ. கி. ஆசான், பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோர் திறந்து வைத்து உரையாற்றினர். இரண்டாம்நாள் காலை 10மணியளவில் திருச்சி-சிந்தாமணி அண்ணா சிலையிலிருந்து முகாமையான தெருக்கள் வழியாக ஏறத்தாழ ஐந்து கல் நீளம் பெரியதொரு பேரணி நடைபெற்றது. பேரணியில் ஓர் இலக்கத்திற்கு மேல் தி. க. தொண்டர்களும், மகளிரும் கலந்து வந்தனர். ஊர்வலத்தின் இடையில், சுவடித்த ஊர்தியில் திருவாளர்கள் கி. வீரமணி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், செய்பால் சிங் கசியப் (பா. உ.), வி.டி. ராசசேகர், ராம்விலாசு பசுவான் (பா. உ.) ஆகியோர் அமர்ந்து வந்தனர். அன்று பிற்பகல் மாநாட்டிற்கு டி. பி. யாதவ் (பா. உ.) தலைமை தாங்கினார். கலைஞர் கருணாநிதி, செய்பால்சிங் கசியப், (பா.உ) இராம் விலாசு பசுவான் (பா. உ.) வி. டி. இராசசேகர், ஏ. கே. அப்துல் சமது (பா. உ.), மன்னை நாராயணசாமி, இராம. அரங்கண்ணல், சீர்காழி பெ. எதிராசு, டி. என். அனந்தநாயகி, சி. ஆர். எட்மண்ட் சிவ. இளங்கோ, பேரா. தமிழ்க்குடிமகன் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழக வரலாற்றில், பெரியார்க்குப்பின் திராவிடர் அணி திரண்ட, குறிப்பிடத்தக்க எழுச்சிபுள்ள மாநாடு இது. மாநாட்டில் பல முகாமையான தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. கோயில் கருவறைக்குள் அனைத்துச் சாதியாரும் பூசகராக வரவேண்டும் என்பதும், தமிழீழ விடுதலைப் புலிகளைச் சிங்கள அரசிடம் ஒப்படைக்காமல் குடியுரிமை தந்து காக்க வேண்டும் என்பதும் அவற்றுள் குறிப்பிடத் தக்க இரு தீர்மானங்களாகும்.

5) உ. த. மு. க ; தெ. ஆ. (வடக்கு) மாவட்டத் தொடக்க விழா :

சென்ற 20-6-82 ஞாயிறு மாலை 7 மணியளவில் தென்னார்க்காடு [வடக்கு] மாவட்ட உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க

www.thamizham.net - Free E book No 7522

விழா, விழுப்புரம் மந்தக்கரைத் திடலில், மாவட்டத் தலைவர் திரு. ந தமிழ்வன் க. மு. கல். மு. அவர்களின் தலைமையிலும் அருள்நிறை பெரியவர் உயர்திரு. மு.சண்முகனார் (முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்) இந்நாள் சட்டப் பேரவை உறுப்பினர் உயர் திரு. கு. மா. பழனியப்பன் ஆகியோர் முன்னிலையிலும் சிறப்புற நடைபெற்றது. விழாவை மாவட்டச் செயலர் திரு விழுப்பரையன் அவர்களும், விழுப்புரம் வட்டச் செயலர் திரு அ நக்கீரன் அவர்களும் நீண்ட நாட்களாகவே நன்கு திட்டமிட்டுச் சிறப்புற ஏற்பாடு செய்திருந்தனர். அவர்களுக்குத் தோன்றாத் துணையாக உ.த.மு.க. தலைமைக் கழக அறிவியல் துறைச் செயலர் திரு. தென்மொழி தமிழநம்பி அவர்களும், மாவட்டப் பொருளர் திரு. ச. சின்னத்துரையும் இயங்கி வந்தார்கள். விழாத் தொடக்கத்தில் விழுப்பரையன் அவர்களின் அறிவறிந்த மக்கள் செல்வன் எழில். இளங்கோவனும், செல்வன் எழில். அருள்மொழியும் இணைந்து தமிழுணர்வுப் பாடல்களைப் பாடி எழுச்சியூட்டினர். திரு. அ. நக்கீரன் வரவேற்புரைக்குப் பின், தலைவர் அவர்களின் விளக்கமான முன்னுரை நிகழ்ந்தது. அதைத் தொடர்ந்து பெரியவர் மு. சண்முகனார் அவர்கள் உ.த.மு.க. வை வரவேற்று வாழ்த்தும் வகையில் நல்லுரை நிகழ்த்தினார். பின்னர் புதுவை மாநில உ.த மு.க. தலைவரும், வழக்கறிஞரும் ஆகிய சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்கள் உ.த.மு க. கொடியினை ஏற்றி வைத்து அருமையான விளக்கவுரை யாற்றினார். அவர்களைத் தொடர்ந்து, முன்னாள் நகர தி.மு.க. துணைச் செயலர் பு. ம. லோ சீனுவாசன், விழுப்புரம் உ.த மு.க. தலைவர் கோவி. இளஞ்சேரன், கோடையிடி குமாரசாமி, இரவி, திருவண்ணாமலை செகந்நாதன், சாத்தனூர் புலவர் ஆறுமுகம், மா. பொழிலன், சட்டமன்ற உறுப்பினரும் நெடுநாள் தென்மொழி அன்பருமாகிய திரு. கு. ப. பழனியப்பன், தெ. ஆ. தெற்கு மாவட்ட உ.த.மு.க தலைவர் புலவர். திரு தூக்கிய திருவடியார் ஆகியோர் கருத்துரையாற்றினர். அவர்களைத் தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்ட உ த மு க. செயலாளரும், தென்மொழி மறவரும் ஆகிய திரு. இரா. பாவாணன் அரிய ஓர் உணர்வுரையாற்றினார் இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் உ.த மு.க. தோன்றியதற்கான காரணியங்களை விளக்கியும், இன்றுள்ள அரசியல் பூசல்களையும் புரைகளையும் நன்கு எடுத்துக் காட்டியும், கழகக் கொள்கைகளையும் அதன் தேவைகளையும் விரிவாக எடுத்துக் கூறியும் மூன்று மணி நேரம் எழுச்சி மிக்கதொரு சிறப்புரையாற்றினார். இரவு 1½ மணியாகியும் கூட்டத்தினர் அவர் உரையினை அசையாது செவிமடுத்தது குறிப்பிடத்தக்கது. மாவட்டப் பொருளர் திரு.ச.சின்னத்துரை நன்றியுடன் நிகழ்ச்சி முடிவுற்றது.

இந்நிகழ்ச்சி அமைப்பிற்கும் அதன் வெற்றிக்கும் உடல் நலம் குன்றிய நிலையிலும் அயராது உழைத்த மாவட்டச் செயலர் திரு.விழுப்பரையன், முகமலர்ச்சி குன்றாது இளைஞரைப் போல் அங்கும் இங்கும்

www.thamizham.net - Free E book No 7522

ஓடியாடி இராப் பகல் இயங்கிய வட்டச் செயலர் திரு. அ. நக்கீரன், தம் அழுத்தமான வாழ்வியல் பணிக்கிடையில் ஊக்கம் குன்றாது துணைநின்ற தென்மொழி தமிழநம்பி, மாவட்டப் பொருளர், வினைமறவர், திரு. ச. சின்னத்துரை. அவருடன் தோளோடு தோள் நின்று உதவிய தலைமையகச் முதன்மைக் குழுஉறுப்பினர் திரு. திருமாறன், ஆகியோரும், தந்நலமற்ற அன்பர் பலரும் பெரும் காரணியமாவர். அவர்கள் அனைவரும் மிகுந்த பாராட்டுக் குரியவராவர். அச்சிட்ட சுவரொட்டிகளுடன் மேலும் நூற்றுக்கணக்கான சுவர் அறிக்கைகளைத் தன் கையாலேயே அழகுற வண்ணமுடன் எழுதி, அவற்றை விழுப்புரம் நகர்ப்பகுதி முழுதும் ஒட்டிய வீரத்தமிழ்த்தம்பி எழில் இளங்கோவனின் ஆர்வம் இவ்வகையில் பெரிதும் பாராட்டத் தக்கதும் பின்பற்றுதற்குரியதும் ஆகும். மொத்தத்தில் விழுப்புரம் பகுதியில், இந் நிகழ்ச்சிக்குப்பின் அரசியல், மத, சாதி, கட்சி, வேறுபாடின்றி, நல்ல தமிழுணர்வும் தமிழின வுணர்வும் வேர் பிடித்து வளர்ந்து பரவும் என்று நிகழ்ச்சிக்கு வந்திருந்த வெளியூர் உள்ளூர் அன்பர்கள் அனைவரும் கருத்தும் நம்பிக்கையும் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

6. சொல்லாய்வுச் சுற்றுக் கூட்டம் – 4, சென்னை

கடந்த 26-6-82 காரிக்கிழமை மாலை 5 மணியளவில் சென்னை, தமிழ், சமற்கிருதம் பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனக் கட்டடத்தில், சொல்லாய்வறிஞர் திரு. ப. அருளி, வணி.இ.,ச.இ. அவர்களின் நான்காவது சொல்லாய்வுச் சுற்றுக் கூட்டம், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வழக்கம்போல் நிகழ்ச்சியில் உள்ளூர் வெளியூர் அறிஞர்களும், பேராசிரியர்களும், மாணவர்களும், தமிழன்பர்களும் தாய்மார்களும் நிறைந்த அளவில் குழுமியிருந்தனர். இம்முறை அருளி அவர்கள், சேறு, மரபு, மூசு, சாடி, பின், வலி ஆகிய சொற்களை ஆய்வுக்கென எடுத்துக் கொண்டு, ஆய்வுரை நிகழ்த்தினர். ஒவ்வொரு சொல்லும் அதன் வேர், மூலம், வெளிப்பாடு, பொருள், இனவகை, அவை பிற திரவிடமொழிகளிலும், கீழை மேலை ஆரிய மொழிகளிலும் பயின்றுவரும் தன்மை போன்ற நிலைகளில் கழக இலக்கிய வழக்குச் சான்றுகளுடன் விளக்கப்பெற்றன. முன்னுள்ள ஆய்வாளர்களின் ஆய்வு முறைகளுக்கும் இவருடைய ஆய்வு முறைக்கும் அடிப்படையில் ஓரளவு ஒபபுமை யிருந்தாலும், அவற்றினும் இது திண்ணிதாகவும், விரிவாகவும், அறிவியல் பொருத்தம் உடையதாகவும் எவ்வகை மறுப்பின்றியும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருப்பதை அனைவரும் உணர முடிந்தது. கேட்டோர் வியப்படையும் வண்ணம் அவர் சொற்களை அவற்றின் வளர்ச்சிக் கூறுகளுடன் விளக்குவது பெரிதும் மகிழ்ந்து போற்றத்தக்கது. தொடக்கத்தில் நிறுவன இயக்குநர் உயர்திரு. ஆறு. அழகப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரைநிகழ்த்தினர். பாவலரேறு அவர்களின் முன்னுரையும் முடிவுரையும் ஒவ்வொரு கூட்டத்திலும்,

www.thamizham.net - Free E book No 7522

அருளி அவர்களின் ஆராய்ச்சி உரையை மக்கள் நன்கு விளங்கிக் கொள்ளவும் மயக்கறுக்கவும் உதவுவனவாக அமைந்திருப்பது பெரிதும் மகிழத்தக்கது. ஆய்வுரைக்குப்பின் பண்டாரகர் மெ. சுந்தரனார் அவர்களின் தொகுப்புரை நிகழ்ந்தது. நிகழ்ச்சி மிகுந்த சிறப்புடன் இரவு 8 மணியளவில் முடிவுற்றது. அடுத்த ஆய்வுக் கூட்டம் வரும் 18-7-82 காலை 10 மணியளவில் நடைபெறும்.

பிற செய்திகள்

1) அந்தமானில் 'மக்கள் கட்சி' அரும்பியது :

கடந்த மே முதல்நாளில், அந்தமான் தமிழர்களிடையே, தலைவர் கந்தசாமி தலைமையில் 'மக்கள் கட்சி' என ஒரு புதிய கட்சி தொடங்கப் பெற்றது. அன்று காலை தொடங்கி நூற்றுக் கணக்கான இளைஞர் குழாத்துடன், தலைவர், கந்தசாமி அவர்கள் கட்சி அலுவலகம் ஈகி [தியாகி]கள் திடல், ரத்தினம் அங்காடி, அன்னை பூர்ணா அருகில், சிம்காறு திடல், மதார் பாடு, சாதிப்பூர், சங்கிலி காட் கடைத் தெரு, பால் பண்ணை சந்திப்பு, லப்பாலயன் வானூர்தித் திடல், பத்திரக்கட்டா, அத்திருபாத், புனியாதாபாத் அருது சந்திப்பு — முதலிய 23 க்கும் மேற்பட்ட இடங்களில் கட்சிக் கொடிகளை ஏற்றி வைத்தார். புதிதாகத் தோன்றிய மக்கள் கட்சிக்கு அங்கு ஏற்கனவே உள்ள இந்திரா பேராயம், தி. மு. க, அ. தி. மு.க. முதலிய கட்சிகளை விட பேராதரவு இருப்பதாகக் கூறப் பெறுகிறது.

2) புதுச்சேரியில் தமிழ்வளர்ச்சித் துறை—கோரிக்கை

புதுச்சேரி, தனித்தமிழ்க் கழகத்தின் செயற்குழுக் கூட்டம், கடந்த 7-4-82 மாலை, தலைவர் க. தமிழமல்லன் தலைமையில் நடைபெற்றது. அதில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) புதுவை முதல்வர் சட்டமன்றத்தில், தமிழ் வளர்ச்சித்துறை அமைக்கக் கருத்தில்லை என்று கூறியதைக் குறித்துக் கழகம் வருந்துகிறது. முதல்வர் தம் கருத்தை மறுஆய்வு செய்யுமாறும், தமிழ் வளர்ச்சித்துறை அமைக்க முயலுமாறும் கழகம் கேட்டுக் கொள்கிறது.

2) தமிழ் வளர்ச்சித் துறை அமைக்குமாறு சட்டமன்றத்தில் வேண்டுதல் விடுத்த திருவாளர்கள் மு. ஆ. சண்முகம், நா. மணிமாறன் ஆகியோர்க்குக் கழகம் நன்றி தெரிவிக்கிறது.

3) திருக்குறளைப் பழித்துப் பேசிய காஞ்சி மடத் தலைவர் சயேந்திர சரசுவதி அவர்களைக் கழகம் கண்டிக்கிறது. அவர் தம் கருத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கழகம் கேட்டுக் கொள்கிறது.

3) தமிழ் ஆய்வரங்கம் – கருத்தரங்கு

தமிழ் ஆய்வரங்கத்தின் 3-ஆம் கருத்தரங்கு, புதுச்சேரியில் 30-5-82 மாலை 6-30 மணியளவில் வணிக அவைக் கூடத்தில், திரு

www.thamizham.net - Free E book No 7522

புதுவை. செல்வம் தலைமையில் நிகழ்ந்தது. தமிழ் ஆய்வரங்க அமைப்பாளர் திரு. தி. நா. அறிவு ஒளி, க. மு; கல். இ. அவர்களின் 'உணர்வுகள் அழிவதில்லை' என்னும் புதினத்தை, புலவர். இரா. திருமுருகன் க. மு; கல். மு. அவர்கள் சீரிய முறையில் திறனாய்ந்து உரை செய்தார். ஆங்கிலப் பேராசிரியர். திரு. இராசா, க. மு' அவர்கள் 'ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு — ஓர் அறிமுகம்' என்னுந்தலைப்பில் ஆய்வுரையாற்றினர். மற்றும், பாவலர் திரு. கை. திருநாவுக்கரசு, திரு. ஆ. அரிமாப்பாமகன், க. மு. ஆகியோர் தம் இலக்கிய ஆக்கங்களை எடுத்துரைத்தனர். இறுதியில் திரு தி. நா. அறிவுஒளி நன்றி கூறினர். தமிழீழப் புலிகளை இலங்கையரசிடம் ஒப்படைத்தல் கூடாதென்றும், புதுச்சேரி அரசு தமிழ் வளர்ச்சித் துறையினை அமைத்தல் வேண்டும் என்றும், தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு பட்டம் பெற்றவர்க்கு அரசுப் பணிகளில் முன்னுரிமையளிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

நன்கொடைகள்

(24-4-82 முதல் 1-7-82 வரையிலான நன்கொடை வரவுகள்)

1.	24-4-82 திருவெறும்பூர் (மிகுமின்தொழிலகம்) இராதா-இராணி ஆகியோரின் ஆண் மகவுக்குச் 'செந்தமிழ்ப் பாண்டியன' எனப் பெயரிட்டதன் நினைவாக	5-00
2.	30-4-82 சாத்தனூர் அன்பர், மு. ஆறுமுகம் — மரகதம் ஆகியோர்க்குப் பிறந்த பெண் மகவு செந்தமிழ்க் கோதையின் நினைவாக	10-00
3.	11-5-82 கள்ளக்குறிச்சி, உ. செல்லூர் கதிர்காமன்-தாயம்மாள் ஆகியோர்க்குப் பிறந்த பெண். மகவிற்கு அறிவுக்கரசி எனப் பெயரிட்டதன் நினைவாக	5-00
4.	1-6-82 ஆனைமலை, ப. வீரப்பன் தம் மகள் அங்கயற் கண்ணியின் பூப்பு நன்னீராட்டு விழா நினைவாக	10-00
5.	1-6-82 செ. கண்ணன், சென்னை—5	25-00
6.	5-6-82 இரணியன், கோவை (ஏப்-மே-சூன்)	30-00
7.	14-6-82 ந. இராசகோபாலன், கடலூர்—1	5-00
8.	16-6-82 பட்டுக்கோட்டை, இறைவாணன் [சிங்கை] மகள் சாந்தி – சுந்தரலிங்கம் திருமண நினைவாக	50-00
9.	16-6-82 முதலிப்பட்டி. சே. மெய்யிறைவன் — வீரமணி ஆகியோரின் திருமண நினைவாக	50-00
10.	18-6-82 சென்னை-31, க. சோலை தாம் பணியினின்று ஓய்வு பெற்றதின் நினைவாக	5-00
11.	28-6-82 சீனி வாசுதேவன், அனுப்பப்பட்டி	10-00
12.	28-6-82 கொம்மக்கோவில் கொ. செ.சின்னப்பனார் மகன் கொ. சி. தனியரசு —கலைச்செல்வி திருமண நினைவாக	20-00
13.	1-7-82 சோ. கோவிந்தன், சென்னை-5.	13 00

www.thamizham.net - Free E book No 7522

என்னைப் பற்றி நானே கேள்விப்படுவது!

—பெருஞ்சித்திரனார்.

6. சிற்றுண்டியும் சிற்றுண்டித்தட்டும்!

ஏறத்தாழ, பதினெட்டாண்டுகளுக்கு முன் நடந்தது இது. அப்பொழுதெல்லாம் தென்மொழி மிகவும் இடர்ப்பட்டும், பொருள் முட்டுப்பட்டும் நடந்து கொண்டிருந்தது. நம் வீட்டிற்கு எப்பொழுதும் மாணவர்களும் ஆசிரியர்களும் அன்பர்கள் பிறரும் வந்து போன வண்ணமாகவே இருப்பர். அவர்களெல்லாரும் அவ்வப்பொழுது தென்மொழிப் பணியில் ஈடுபடுவர். எனவே எல்லாருக்குமே உணவு நம் வீட்டில்தான். அம்மாவுக்கு (அஃதாவது என் துணைவிக்கு) ஓயாத வேலை. சமையல் வேலையே சரியாயிருக்கும். நம் பிள்ளைகளெல்லாம் சின்னஞ் சிறுவர்கள்.

ஒருமுறை அம்மா மாலைநேரச் சிற்றுண்டியாக வாழைக்காய்த் தோச்சி (பச்சி)யோ வடையோ செய்தாள். அதனை அப்பொழுது அங்கிருந்த எழுவர்க்கோ எண்மர்க்கோ தட்டுகளில் பரிமாறினாள். பேசிக் கொண்டிருந்த எனக்கும் நண்பர்களுக்கும் பிள்ளைகள் ஆளுக்கொரு தட்டாகக் கொண்டுவந்து வைத்தனர். வீட்டில் இருந்த தட்டுகளில் ஒன்றிரண்டு பெரியவை; இரண்டொன்று சிறியவை. அதே போல், அலமியத்தட்டும், நிலை வெள்ளித் (Eversilver) தட்டும் கலந்திருந்தன.

ஓரிரண்டு ஆண்டுகள் கழித்து, இது பற்றி ஒரு பழியுரை என் காதுக்கு வந்தது. அன்று சிற்றுண்டி சாப்பிட்ட பொழுது எனக்குத் தரபெற்ற தட்டு சிறிது பெரியதாம்; நிலைவெள்ளியாம! வேறோர் அன்பர்க்கு (பழிகூறியவர்க்கு) வந்தது சிறிது சிறியதாம்; அலமியமாம்! இதைக் கூறியவரிடம் நான் கேட்டேன். 'தட்டு இருக்கட்டும்; தட்டில் பண்டங்களின் எண்ணிக்கை கூடுதல் குறைவாக இருந்ததா? எண்ணிப் பார்த்தாரா, அந்த அன்பர்?' என்றேன். அவர் சொன்னார், 'அதெல்லாம் சரியாகத்தான் இருந்ததாம்; தட்டுதான் தரமும் வடிவும் வேறுபட்டிருந்ததாம்'—என்று! எப்படி? சோறு போடாமற் போனால் குற்றம் இல்லை. போட்ட சோற்றில் கல்லிருப்பது குற்றந் தானே!

> உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
> வடுக்காண வற்றாகும் கீழ். (1079)

7. அளவுக்கு மீறித் தூக்குகிறார், அருளியை!

அண்மையில் ஒரு செய்தி என் காதுக்கு வந்தது. கடந்த நான்கு ஐந்து மாதங்களாகச் சொல்லாய்வுக் கூட்டம் சென்னையில் நடந்து

www.thamizham.net - Free E book No 7522

வருவது அனைவர்க்கும் தெரியும். சொல்லாய்வறிஞர் அருளி அக் கூட்டத்தொடரில் மிகவும் அரிய, சிறந்த விபத்தகுந்த சொல்லாய்வுகளை நிகழ்த்தி வருகிறார். அவ்வாய்வுரைகளை நான் ஒருவனே கேட்டுக் கருத்துரையோ மதிப்புரையோ வழங்கினால் தவறாகவும் நடுநிலை திறம்பியதாகவும் கருதப் பெற்று விடுமோ என்று அஞ்சித்தான் (ஏனெனில் அருளி என் இரண்டாவது மருமகனார்) அக் கூட்டத் தொடரைக் கற்றுத் தேர்ந்த அறிஞர்கள் முன்னிலையிலும், ஓர் ஆய்வுக் கூடத்திலும், பொதுமக்கள் யாவரும் கேட்கும் வண்ணம் பொது நிகழ்ச்சியாகவும் வைக்க ஏற்பாடு செய்தேன். அக் கூட்டத்தொடரின் ஒவ்வொரு கூட்டமும் தகுதியும் புலமையும் சிறந்து விளங்கும் வெவ்வேறு அறிஞர்கள் முன்னிலையில் நடந்து வருகிறது. அந் நிகழ்ச்சியை வந்து கேட்ட நடுநிலையுள்ளம் கொண்ட அறிஞர்கள் பலரும், பிறர் எவரும் வியந்தும் மகிழ்ந்தும் பலபடப் போற்றியும் ஊக்கியும் வருகின்றனர். இஃது அங்கு வரும் அனைவருக்கும் தெரியும் வெளிப்படையான உண்மை. திரைமறைவில் நடப்பது அன்று. நிகழ்ச்சியைக் கேட்கும் எவரும் எதுபற்றியும் கூட்ட இறுதியில் கருத்துக் கூறவும் மறுத்துக் கூறவும் வாய்ப்பளிக்கப் பெறுகிறது. இதில் எந்த ஒரு தவறோ, குழப்பமோ, இழுக்கோ வந்துவிடக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு கூட்டத்திற்கும் நானே தலைமை ஏற்கிறேன். ஒவ்வொரு முறையும் நூற்றுக்கணக்கான அறிஞர்களுக்குத் தனியே அஞ்சல்வழி அழைப்பறிக்கைகள் விடுக்கப் பெறுகின்றன. செய்தியிதழில் விளம்பரமும் செய்யப் பெறுகிறது. 'கூட்டத்திற்கு அனைவரும் வரலாம், ஓர் அரிய தமிழாய்வில் ஈடுபடலாம்'-என்பதற்காகவே இவ்வேற்பாடு. இதில் ஒளிவு மறைவுக்கு இடமே இல்லை அக் காலத்தில் தகுபுலவோர் நிரம்பிய அரசவை அரங்கேற்றம் போன்றது இந்நடைமுறை!

இந்நிலையில் மெத்தப் படித்ததாகவும் தமிழ்மொழி, வளர்ச்சியில் ஏதோ தங்களுக்கு மட்டுமே நிறைந்த அக்கறை இருப்பதாகவும் கருதிக் கொள்ளும் சிலர் சொல்கிறார்களாம், 'ஐயா (அஃதாவது நான்) வேண்டுமென்றே அவர் மருமகன் என்பதற்காகவே, அருளியின் ஆய்வை அளவுக்கு மீறிப் போற்றுகின்றார்; புகழ்கின்றார்; தூக்கி விடுகிறார்! அருளியை விட வேறு எத்தனைப் பேர் உள்ளார், சொல்லாய்வுப் புலவர்கள் — (!) அவர்களையெல்லாம், அவர் வேண்டுமென்றே புறக்கணிக்கிறார்; அல்லது போற்றாமலிருக்கிறார்' —என்று!

உண்மையாகவும், தூய உள்ளத்தோடும், நடுநிலை துளியும் திறம்பா நெஞ்ச உணர்வோடும் நான் அனைவர்க்கும் கூறுகிறேன். ஒருமுறை அருளியின் கூட்டத்திற்கு வாருங்கள். அவர் ஆய்வுரையை அமைந்திருந்து கேளுங்கள். அதில் பிழையோ குறையோ, கருத்து மாறுபாடோ இருந்தால் நேருக்கு நேராகச் சொல்லுங்கள். அவர் ஆய்வு தவறாக இருந்தால் என்னைக் கண்டியுங்கள். சரியாக

www.thamizham.net - Free E book No 7522

இருந்தால் அவரைப் பாராட்டுங்கள்! ஊக்கி விடுங்கள்! அவ்வாறு உண்மையான தமிழ் வளர்க்கும் நோக்கத்துடன் தான், பாவாணர் உள்பட, அறிஞர்கள் பலரையும் தென்மொழி வாயிலாக ஊக்கப் படுத்தியும் உலகுக்கு அறிவித்தும் வந்தேன்; வருகிறேன். இதில் உறவுக்கும் மதிப்பில்லை; செல்வத்திற்கும் மதிப்பில்லை. உண்மை அறிவே மதிக்கப் பெறுகிறது; தமிழே போற்றப் பெறுகிறது. அவ் வகையில் உழைக்கும் தக்கவர் எவராயினும் அவரவர் தகுதியைத் தென்மொழி போற்றவே செய்கிறது. ஆனால் உண்மையல்லாத எதன் மேலும் தென்மொழி முத்திரை குத்தப் பெறுவதில்லை. அதற்காக என்னை நொந்து கொள்வதிலோ பழியுரைப்பதிலோ பயனில்லை. அஃது ஒன்றால் அறியாமையாக விருக்கலாம்; அன்றால் பொறாமையாக இருக்கலாம். இரண்டும் இல்லையானால், என்மேல் வேறு வகையால் ஏற்பட்ட மனக்குறையாக இருக்கலாம். அதற் காக உண்மையை வெறுப்பானேன்? அல்லது மறைப்பானேன்? பாவாணரின் சொல்லாய்வுச் சிறப்பை, இவர்களைக் கேட்டுக் கொண்டா தென்மொழி தலைமேல் வைத்துப் போற்றியது? அப் பொழுதிருந்த நடுவுநிலைமை அல்லது உண்மை இப்பொழுதுமட்டும் இல்லாமற் போய்விடுமா, என்ன?

> செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
> எச்சத்திற் கேமாப்பு உடைத்து! (112)

8. வேதமும் வியாசரும்!

அன்பர் ஒருவர் என் உரையை 'வேத' மாகவும், என்னை 'வேதவியாச'ராகவும் கருதியிருந்தாராம்! இப்பொழுது அதற்குப் பழுது ஏற்பட்டு விட்டதாம்! அப்படி, நண்பர் ஒருவர்க்கு எழுதி, என்மேல் குறைபட்டுக் கொண்டிருக்கிறார். இதைக் கேள்விப் படுகையில் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சியொன்று நினைவுக்கு வருகிறது.

அன்பர் ஒருவர் யாருக்கு மடல் எழுதினாலும் 'வணக்கம்' போடா மல் எழுதுவார். (இப்படி எழுதுவது சிலர் வழக்கம்! — அவர்களை நினைக்கும் பொழுது, 'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர், மக்கட்பண்பில்லா தவர்' (996) என்னும் குறள் தான் நினைவுக்கு வரும்). அவரை அதுபற்றி ஒருமுறை மிகுவாகக் கடிந்து கொண்டேன். அதுவுமின்றி, அவர் அவ்வப்பொழுது எழுதிக் காட்டும் பாடல்களிலும் சிற்சில குறைகளைச் சுட்டிக் காட்டித் திருத்தி வந்தேன். இதனாலோ, வேறுசில வகையிலோ, அவர்க்குப் படிப்படியாக என்னைப் பிடிக்காமல் போய்விட்டது. அதன்டிப்படை யாக, நான் என்போல் சிலரை வளர்க்க விரும்பவில்லை என்பதைக் குறையாகவும் குற்றமாகவும் கூறி வந்தார். அதன்பின் அவர் எனக்கு ஒருகால் ஒரு மடல் எழுதியிருந்தார். அதில், அவர் அது வரை என்னை இறைவனாக எண்ணி வந்ததாகவும், அன்றிலிருந்து

www.thamizham.net - Free E book No 7522

இறைவனுக்கு அடுத்தபடியாக எண்ணி வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார். இவரை யார் என்னை இறைவனாகக் கருதும்படி சொன்னது? அதன்பின் யார் இவரை இறைவனுக்கு அடுத்தபடியாக என்னைக் கருதும் படியாகச் சொன்னது? நான் இறைவனாக முடியுமா? இவர் செய்த பிழைக்கு நான் என்ன செய்வது?

அதுபோல, என் உரையை வேதமாகவும் என்னை வேதவியாசராகவும் கருதிக் கொள்ளும்படி யார் அந்த அன்பரைக் கேட்டுக் கொண்டது? ஏதோ ஒன்றை என்னிடம் எதிர்பார்த்திருக்கின்றார், அந்த அன்பர்! அது நடவாது என்று கருதிய பொழுது, என்னை இவ்வாறு குறைகூறி எழுதிக் கொண்டிருக்கின்றார்! என்னிடம் இவர் எதை எதிர்பார்த்திருந்தார் என்பது எனக்கெப்படித் தெரியும்? அதை நேரிடையாகச் சொல்லிக் கேட்பதுதானே முறை! அதை விடுத்து, இப்படி மடல்வழி எல்லாருக்கும் எழுதிக் கொண்டிருப்பதில் என்ன பயன் விளைந்து விடும் என்று கருதுகின்றாரோ, இவ் வன்பர்? தெரியவில்லை

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல். (184)

(தொடரும்)

அனைத்துத் தமிழர்க்கும் ஒரு வேண்டுகோள்!

தமிழகத்தில் தளைப்படுத்தப்பட்டுள்ள தமிழீழ விடுதலை வீரர்களுக்கு அரசியல் அடைக்கலம் தரும்படியும், அவர்கள் சிங்கள அரசிடம் ஒப்படைக்கப்படாமல் தமிழகத்திலேயே தங்கியிருக்கும்படியும், வேண்டுகோள் ஒன்றை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி அல்லது தட்டச்சுச் செய்து அவற்றை நான்கு படிகள் எடுத்து, அந் நான்கு படிகளிலும், ஆங்காங்குள்ள தமிழர்களிடம் ஆயிரக் கணக்கில் கையொப்பங்கள் வாங்கி, அவற்றுள் ஒன்றை இந்தியத் தலைமையமைச்சர்க்கும் மற்றொன்றை இந்திய அயலகத்துறை அமைச்சர்க்கும், மூன்றாவதைத் தமிழ் நாட்டு முதலமைச்சருக்கும், நான்காம் படியை 'முதல்வர், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் சென்னை-5, தமிழ்நாடு' என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம். இவ்வரும் பணியை இன்றே தொடங்குங்கள்! முழு வெற்றி பெறும் வரை தொடருங்கள்!!

சென்னை-5
5—5—82

அன்பன்
பெருஞ்சித்திரனார்

அன்பர்கள் கவனிக்க

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் **காரி, ஞாயிறு** ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

— அமைச்சர்

www.thamizham.net - Free E book No 7522

இந்திச் சிக்கலும் இறுதித் தீர்வும்!

(சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தன், வழக்குரைஞர், கோபி.)

(இந்திச் சிக்கலைப் பற்றியும், அதன் தீர்வு பற்றியும் கூறுகிற ஆய்வுக் கட்டுரை இது. இதில் இந்தி ஆட்சி மொழி என்னும் சட்டநிலை நன்கு தெளிவாக்கப் பெறுவதுடன், அதன் எதிர்கால வல்லாண்மைக்கான சட்டக் காலூன்றுதல்களும் விரிவாக உணர்த்தப் பெறுகின்றன. நேருவின் உறுதிமொழி என்னும் பெயரால் எத்தனைப் போலிமையான தற்காலிகத் தடுப்பு நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும், அஃது, எந்த அளவில் கொடுமையான வெறும் ஏமாற்று என்பதையும் கட்டுரையாசிரியர், சட்டவியல் அறிஞர் திரு. கு. ச. ஆனந்தன் அவர்கள் மிக வெளிப்படையாக விளக்கிக் காட்டியுள்ளார். அனைவரும் கட்டாயம் படித்தறிய வேண்டிய இக் கட்டுரை நூலாகவும் வெளிவரும். —ஆசிரியர்)

மக்கட் தொகை கணிப்பின்படி (Census) இந்தியத் துணைக் கண்டத்தில் பேசப்படும் மொத்தத் தாய்மொழிகள் 1652. இவை 826 மொழிக் கூட்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசமைப்பில் தனித்தகுதி பெற்ற 15 தேசிய மொழிகளில் 380 தாய்மொழிகளும், அத் தகுதி பெறாத 17 பெரு மொழிகளில் 241 தாய்மொழிகளும், மற்ற 19 மொழிக் கூட்டத்தில் 71 தாய் மொழிகளும்; எவ்வகைப் பாகுபாட்டுக்கும் அடங்காத 857 தாய் மொழிகளும்; இந்திய மொழிகள் அல்லாத 103 தாய்மொழிகளும் தனித்தனி இனமாக வகுக்கப்பட்டுள்ளன.

ஆங்கிலப் பேரரசுக்கு முந்தைய ஈராயிரம் ஆண்டுக் கால இந்திய வரலாற்றை ஆய்ந்து பார்த்தால், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஏற்றுக் கொண்ட ஒரே ஆட்சிமொழி (Official Language) என்றுமே இருந்ததில்லை என்பது புலனாகும். வளம் பெற்ற பல பண்டைய மொழிகள், இந்தியத் துணைக் கண்டத்தின் வரையறுக்கப்பட்ட பல்வேறு நிலப் பகுதிகளில் பன்னூறு ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகின்றன. முகலாயப் பேரரசுகள் சிலமை கருதி "உருது மொழியைச்" சில காலம் ஆட்சி மொழியாக ஆக்கின. ஆனால் இந்திய நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், அம்மொழி, ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. முகலாயப் பேரரசு வீழ்ந்த பின்னர், உருது மொழிக்குத் தரப்பட்ட அச் சிறப்பு தானாகவே மறைந்து போயிற்று.

இந்திய நிலப் பகுதிகளில், அந்தந்த வட்டாரமொழிகள்தாம் நீண்ட நெடுங்காலமாக அரசுச் செயல்களுக்கும், மக்கள் பணிகளுக்கும், அறமன்றங் (Court)களுக்கும், கல்விக் கூடங்களுக்கும், உரிய அரசு அலுவல் மொழிகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. பின்னர் ஆங்கில அரசில், ஆங்கிலமே ஆட்சி மொழியாயிற்று.

இந்திச் சிக்கல்

இந்தியா விடுதலை அடைந்த பின்னர், பேராயக் (Congress)

www.thamizham.net - Free E book No 7522

கட்சி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சூழலில் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்தின் மூலமாகத்தான், 'நமது வரலாற்றிலேயே முதன் முதலாக இந்தியா முழுவதற்கும் எல்லா அரசு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்துவதற்கான ஒரே இந்திய மொழி (இந்தி!)" ஆட்சிமொழியாயிற்று. ஆனால் அரசமைப்பு நடைமுறைக்கு வந்தபோது, இந்தி 'ஆட்சி மொழிக்குரிய' தகுதியைப் பெறக்கூடிய அளவில் வளர்ந்திருக்கவில்லை. இந்தி, ஆட்சி மொழியின் வளத்தைப்பெற 15 ஆண்டுகள் தேவைப்பட்டன. அதுவரையும் அரசுப் பணித்துறைச் செயல்களில் (Official Purposes) பயன்படுத்த 'ஆங்கிலம்' துணை மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அக் காலக்கெடுவுக்குப் பின்னர்த் தேவைப்பட்டால் ஒரு நாடாளுமன்றச் சட்டத்தின் மூலமாக ஆங்கிலத்தை நீட்டிப்புச் செய்து கொள்ளலாம். இந்த உடன்பாட்டுக் கருத்தின் பேரில்தான், 1965-ஆம் ஆண்டுவரை ஆங்கிலம் நீட்டிக்கப்பட்டது. என்றாலும் "இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி" என்பது அன்றே உறுதியாகிவிட்டது. ஆனால் ஆங்கிலம், இந்தியுடன் "இணைமொழியாகவோ" (Associate Language) அன்றி இந்தியாவின் "கூடுதல் ஆட்சிமொழியாகவோ" (Additional Official Language) அரசமைப்பால் ஏற்கப்படவில்லை.

இந்தி மட்டும் ஆட்சி மொழியானதன் விளைவுகள்

1. பல்வேறு மொழி, பண்பாடு, நாகரிகங்களைக் கொண்ட- ஏறத்தாழ 20 தேசிய இனங்களைக் கொண்ட-இந்திய நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 27. 3% மக்களால் மட்டுமே இந்தி பேசப்படுகின்றது. அஃதாவது 6 மாநிலங்களிலும் 2 நடுவண் அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளிலும் மட்டும் இந்திமொழியைப் பேசுகின்றனர். மீதமுள்ள 16 மாநிலங்களிலும் 7 நடுவண் ஆட்சிப் பகுதிகளிலும் வாழும் 72. 7% மக்கள் வேறு வளமுள்ள மொழிகளைப் பேசுகின்றனர். இந்தி மொழியினர் தம்மைப்போல் 2½ மடங்கு வேற்று மொழியினர் மேல், அரசமைப்பின் வழியாகத் தம் மொழியைத் திணித்து, மற்ற தேசிய இனங்களை அனைத்துத் துறைகளிலும் அடிமைகளாக ஆக்கிவிட்டனர். "ஒற்றுமை" என்ற பெயரால், ஒரு தேசிய இனம் மற்ற 19 தேசிய இனங்களின்மேல் வல்லாண்மை செலுத்தும் வேறு ஒரு மக்களாட்சி நாடு உலக மட்டத்தில் இல்லை.

2. இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அனைத்துத் துறைகளிலும் அளவற்ற, நயமற்ற (நியாயமற்ற) சாய்காலை(செல்வாக்கை)ப் பெற்று, இந் நாட்டையே நடத்தும் வல்லாண்மையைப் பெற்றுக் கொண்டனர்.

3. மற்ற மாநில மொழிகளைப் பேசுவோரது தாய்மொழி, இந்தி அல்லாத வேற்றுமொழியாக இருக்கும் ஒரே காரணத்தினால்,

www.thamizham.net - Free E book No 7522

அவர்கள், மொழி, அரசுநிலை, பொருளியல், குமுகநிலை ஆகியவற்றில் முடமாக்கப்பட்டு இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

4. அரசியற் சட்டத்தின் 351-ஆம் பிரிவுப்படி, நடுவண் அரசு இந்தியை வளர்த்தலும், பரப்பலும், நீங்காக் கடமையெனக் கொண்டுள்ளது. தேசிய மொழிகளுக்கு இந்தப் பெருவாய்ப்பு இல்லை.

5, 1952-ஆம் ஆண்டு முதல் இந்தி பேசும் மாநிலங்களில் ஆங்கிலம் பெற்று வந்த இடத்தை, இந்தி கைப்பற்றிக் கொண்டுள்ளது. அற மன்றங்கள், அரசு அலுவல்கள், கல்வித்துறை போன்ற அனைத்துத் துறைகளிலும் ஆங்கு இந்திமொழியே கோலோச்சுகிறது. ஆனால் இந்திபேசா மாநில மக்கள் இந்தியையும் ஏற்றுக்கொள்ள முடியாமல். ஆங்கிலத்தையும் அகற்ற முடியாமல், நடைமுறையில் தத்தம் மாநில மொழிகளை முழுமையான ஆட்சிமொழிகளாகப் பயன்படுத்தவும் முடியாமல், உரிய அளவில் வளர்க்கவும் இயலாமல். கையறு நிலையில், செய்வதறியாது தவிக்கின்றனர்; விரும்பியோ, விரும்பாமலோ. ஆங்கிலத்தைக் கட்டாயமாக இருத்தி வைத்துக் கொள்ள வேண்டிய கட்டுப்பாட்டிற்கும் (நிர்பந்தத்திற்கும்) ஆளாக்கப்பட்டுள்ளனர்.

6. தேசிய மொழிகளின் வளர்ச்சிக்காகச் சில தனிப்பட்ட நிறுவனங்களுக்கும், உதிரித் திட்டங்களுக்கும் பொருள் உதவியையும், குறிப்பிட்ட நல்கைத் தொகைகளையும் நடுவணரசு வழங்குகிறது. ஆனால் ஆட்சிமொழி என்ற பெயரால் இந்தி மொழியை வளப்படுத்தவும், பரப்பவும் பல கோடி உருபாக்களை, பல்வேறு திட்டங்களின் மூலமாக நடுவண் அரசு செலவு செய்கிறது.

இந்தித் திட்டங்கள்

1) தனிப்பட்ட இந்தி நிறுவனங்கட்கு நல்கைகள் தருதல்;

2) புதிய சொற்களை உருவாக்குவதற்கும் இப்போதுள்ள இந்திச் சொற்களை ஆய்வு செய்வதற்கும் பல திட்டங்களையும், பல அமைப்புகளையும் உருவாக்கி அதன் செலவுத் தொகைகளை ஏற்றல்.

3) இந்தித் தொலையச்சு (Tele-Printer)கள், தட்டெழுத்துப் பலகைகள் போன்றவற்றை உருவாக்கும் திட்டங்கள்;

4) இந்திச் சுருக்கெழுத்து முறையை (Short-Hand) உருவாக்கி நடைமுறைப் படுத்தும் திட்டங்கள்;

5) இந்தி பேசா மாநிலங்களில் உள்ள இந்தி ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கல்லூரிகள் நடத்தல்;

6) இந்தி அகரமுதலி (அகராதி)களை உருவாக்குதல்;

7) இந்தி மொழியில் மொழியொலி இசைத்தட்டுகளும் (Linguaphone Records), பதிவு நாடாக்கள் (Taps) மற்றும் பாடங்களையும் புதுமுறையில் உருவாக்கி இந்திப் பயிற்சி அளித்தல்;

www.thamizham.net - Free E book No 7522

8) "பாஷா" (மொழி) என்ற மூன்று திங்களுக்கொருமுறை வெளியிடப்படும் ஏட்டையும் 'இந்தி சமாச்சார் சகத்' (இந்திச் செய்தி உலகம்) என்ற மாத இதழையும், மற்ற இதழ்களையும் வெளியிடுதல்;

9) வெளிநாட்டு மக்களுக்காகப் பலவகை இந்தி வெளியீடுகள்;

10) இந்தி பேசா மாநிலங்களில் உள்ள இந்தி எழுத்தாளர்களுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டங்கள்;

11) இந்திமொழி மூலம் தென்னக மொழிகளைக் கற்பிக்கும் "தாமே கற்பிக்கும் (Self Teaching) நூல்களை" அணியப்படுத்துதல்;

12) அஞ்சல் துறை மூலமாக இந்திக் கல்வியை இலவயமாகக் கற்பிக்கும் திட்டங்கள்;

13) இந்தி நூல்கள் வெளியிடும் தனிப்பட்ட பதிப்பகங்களுக்கு நல்கை (மானியங்)கள் தருதல்;

14) இந்திபேசா மாநிலங்களின் கல்விக் கூடங்கள், நூல் நிலையங்கள் போன்றவற்றிற்கு இலவயமாக இந்திநூல்களை வழங்குதல்;

15) வெளிநாடுகளில் இந்தியைப் பரப்பும் திட்டங்கள்;

16) நடுவண் அரசின் ஊழியர்களுக்கு இந்தி கற்றுக் கொடுப்பதற்கான தீவிரத் திட்டங்கள்;

17) இந்தியைக் கற்பிக்கவும், பரப்பவும் பயிற்சி முறைகளை ஆராயவும் தேவையான ஆராய்ச்சி நிலையங்கள்;

18) கல்லூரிப் பாடப் புத்தகங்களை இந்தியில் உருவாக்குதல்;

19) பல பொறியியல் புதிய (நவீனக்) கருவிகளை, இந்தியைக் கற்பிக்கப் பயன்படுத்துதல்;

20) இந்தி பேசா மாநிலங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு இலவயமாகப் பயிற்சி அளிக்க, ஆக்ராவில் "கேந்திரிய இந்தி சம்மேளனம்" அமைத்தல்.

இத்தனைத் திட்டங்களுக்கும் ஆகும் செலவை நடுவண் அரசே ஏற்றுக் கொள்வதுடன், அவற்றை அதன் நேரிடைக் கண்காணிப்பிலும் இயக்கி வருகிறது. சென்ற 30 ஆண்டுகளில் நடுவண் அரசும், இந்தி மாநிலங்களும், இந்தி வளர்ச்சிக்கும் பரப்புதலுக்கும் செலவிட்ட தொகை ரூ. 700 கோடிக்கும் அதிகம் இருக்கும் எனக் கணக்கிடுகின்றனர். இந்தியில் புதிதாக உருவாக்கப்பட்ட சொற்களும் சொற்றொடர்களும் ஏறத்தாழ 42 000 எனக் கூறுகின்றனர். உலக நாடுகளில் எந்த ஓர் அரசும் இவ்வளவு தொகையை ஒரு மொழிக்காகச் செலவிட்டதில்லை.

சமநிலையில்லா இருமொழிக் கொள்கை

1965-ஆம் ஆண்டு கெடுவிற்குள் ஆங்கிலத்தை முழுவதும்

www.thamizham.net - Free E book No 7522

அகற்றிவிடத் தீர்மானித்து, 1961–ஆம் ஆண்டு முதலே பல வடிவங்களிலும் இந்தி திணிக்கப்பட்டது. "ஆட்சிமொழி ஆணையமும்" (Official Language Commission) "ஆட்சிமொழிக் குழுவும்" (Official Language Commitee) தந்த இந்திப் பரிந்துரைகளை, நடைமுறையாக்கிடக் குடியரசுத் தலைவருடைய ஆணைகளைப் பிறப்பித்தும், நெறிமுறைகளை வகுத்தும், சுற்றறிக்கைகளைத் தந்தும், நடுவண் அரசு விரைந்து செயல்பட்டது. இந்தி பேசா மாநிலங்களின் அனைத்துத் துறைகளிலும் இந்தி திணிக்கப்பட்டுவிடும் என்ற பெரும் இக்கட்டு (பேரபாய) நிலை உருவாயிற்று.

ஆங்கில நீட்டிப்பு எனக் கூறி, "ஆட்சி மொழிகள் சட்டத்தை" (Official Language) உருவாக்கினர். 26-1-1965 ஆம் நாள்முதல், இந்தியே முழுமையான ஆட்சிமொழி ஆகி, ஆங்கிலம் சில அரசுச் செயல்களுககு மட்டுமே துணையாகப் பயன்படுத்தப்படும் என்ற உட்பொருளுடன் கூடிய அச் சட்டமும் நிறைவேறிற்று.

இந்தி எதிர்ப்புப் புரட்சி வெடித்தது. தமிழகத்தில் பலர் தம்மைத் தீயிட்டுக் கொளுத்திக் கொண்டனர். இந்தித் திணிப்பை எதிர்த்து 150-க்கும் மேற்பட்டவர்கள், மாண்டு மடிந்தனர். இந்தியத் தலைவர்களால் பல உறுதிகள் கூறப்பட்டன. ஆனால் அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை; அச் சட்டம் 3 ஆண்டுகளாகத் தள்ளிப் போடப்பட்டது.

1967–ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில், பேராயக் (Congrees) கட்சி, 9 மாநிலங்களில் ஆளுங்கட்சியாக வர இயலவில்லை. நாடாளுமன்றத்திலும் தனது அதிகப் பெரும்பான்மையை இழந்து வலிவு குன்றி விட்டது.

எனவே, அரசியற் காரணங்களால் உந்தப்பட்டு இறுதியாக 8-1-1968-இல் "ஆட்சிமொழிகள் திருத்தச் சட்டத்தை" (Official Languages Amendment Act 1968-I) பேராயக்கட்சி அரசு நிறைவேற்றியது. "இந்தி பேசா மாநில மக்கள் எத்துணைக் காலம் விரும்புகிறார்களோ, அதுவரை ஆங்கிலம், "கூடுதல் இணைமொழியாக" (Additional Official Language) இருக்கும்" என்று, 1959-ஆம் ஆண்டில் **பண்டித நேருவால் தரப்பட்ட உறுதிமொழி; ஆட்சி மொழிகள் சட்டத்தில் (1963), முற்றும் இடம் பெறவில்லை.** அந்த உறுதிமொழி அச் சட்டத்தில் இருப்பதாகக் கூறி, இந்தி பேசா மாநில மக்களை அனைத்திந்தியத் தலைவர்கள் இன்றும் ஏமாற்றி வருகின்றனர். 'இந்தியைத் திணிக்க மாட்டோம்" என்ற உறுதி மொழிகளைத் தந்து கொண்டும் இருக்கின்றனர்.

நடைமுறையில் விளைந்தது என்ன?

(1) '1968-ஆம் ஆண்டில் ஆட்சி மொழிகள் திருத்தச் சட்டத்தின்' மூலமாக, ஆங்கிலம், சில குறிப்பிட்ட செயல்களுக்காக

(தொடர்ச்சி 38-ஆம் பக்கம் பார்க்க

www.thamizham.net - Free E book No 7522

அறிவியல் வளர்ச்சியில் மாணவர் பங்கு

பர். அ. ஆறிறைவன்.

(உ.த.மு.க. தொடக்க மாநாட்டின் மாணவர் அரங்கில் ஆற்றிய உரை)

'அறிவியல் வளர்ச்சியில் மாணவர் பங்கு' என்னும் போது பல்வேறு அறிவியல் துறைகளிலும் வளர்ந்துள்ள கருத்துகளையும் செய்திகளையும் தமிழ் மொழியில் தமிழ் மக்களின் தேவைக்கேற்பப் பயன்படும் வகையில் தருவதற்கு மாணவர்கள் என்ன பணி செய்ய வேண்டும் என்பது பற்றிச் சிந்திக்கிறோம்.

இன்றைய வாழ்க்கை முறையில் பெரும்பகுதி அறிவியல் வளர்ச்சிகளால் ஆக்கம் பெறுகின்றது எனக் கூறலாம். ஒவ்வொரு நாட்டின் பொருளியலும் அறிவியல் வழி அமைந்த தொழில் வளர்ச்சியைப் பொறுத்தே இருக்கின்றது. அறிவியல் துறைகளில் ஈடுபட விரும்புவோர், ஈடுபடுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. 'புதுமைகள்' தோன்றிக் கொண்டேயுள்ளன. இந்நிலை எல்லா நாடுகளுக்கும் பொது. புறவாழ்வில் ஏற்பட்டுள்ள பல மாற்றங்கள் அறிவியலால் எனில், மக்களிடையே வளர்ந்துள்ள 'அறிவியல் நோக்கு' தனி வாழ்க்கையிலும், பொதுவாழ்க்கையிலும் குறிப்பிடத்தக்க சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. 19,20-ஆம் நூற்றாண்டுகள் உலக வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுள்ளன என்பது உண்மை.

இன்று மொழி, இனம், நாடு என்ற அடிப்படையில் புதிய தமிழ்க் குமுகாயத்தை மலரச் செய்ய விரும்பும் நாம், ஆற்றல் வாய்ந்த 'அறிவியல்' வளர்ச்சியைப் புறக்கணிக்க இயலாது. அறிவியல் ஆற்றலிலும் நோக்கிலும் முன்னேறுத இனங்கள் இக்கால் சிறப்புற வாழ்தல் இயலாது. அவை அறிவு, பொருள் நிலைகளில் வேறு நாடுகளையே நம்பி வாழவேண்டிய 'அடிமை' நிலையினை அடைய நேரிடும். தாய்மொழிக் கல்வியின் தேவையும் சிறப்பும், பல அறிஞர்களாலும், பன்னாட்டு மன்றத்தின் கல்வி, பண்பாட்டு நிறுவனத்தாலும் (Unesco) பலமுறை எடுத்துரைக்கப்பட்டுள்ளன. உலகில் இன்று முன்னேறியுள்ள நாடுகளும் அதற்குச் சான்று பகர்கின்றன. அவ்வாறு சிறப்புப் பொருந்திய தாய்மொழிக் கல்வி உண்மையிலேயே காலத்திற்கேற்பப் பயன்தர வேண்டுமெனில், எல்லா அறிவியற் கூறுகளுமே அம்மொழியில் செறிவுடன் கூறப் பெறுதல் வேண்டும். அதுவும், குறிப்பாகப் பொருளியற் சீர்கேடுகளும், மூட நம்பிக்கைகளும் நிறைந்த நமது நாட்டில் அறிவியல் அணுகுமுறையின் இன்றியமையாமை நன்கு விளங்கும். அதற்கு நம் மக்கள் அனைவரும் அறிவியற் கல்வி பெறவேண்டும். அறிவு வளர்ச்சிக்கும், பொருளியல் தேவைகட்கும் ஏற்ற வகையில் தாய் மொழிக்கல்வி அமையாவிடில் ஆங்கிலம் அல்லது வேறொரு மொழிக் கல்வி இயல்பாகவே மக்களை ஈர்க்கத் துவங்கிவிடும்.

www.thamizham.net - Free E book No 7522

நமது தமிழ்க் குமுகாயத்தின் கல்வி நிலை நினைப்பதற்கே அச்சம் தரும் வகையில் சென்று கொண்டுள்ளது. ஆழமாகப் பதிந்து வேரூன்றிவிட்ட அயல்மொழிக் கல்வி மேலாண்மையை நீக்கி அவ்விடத்தைத் தமிழ் எடுத்துக் கொள்ளச் செய்ய வேண்டும். ஆங்கிலக் கல்வி, உலகத்தோடு தொடர்பு கொள்ளத் தேவைதான். ஆனால் அதைவிட முகாமையான தேவை நம் மக்கள் ஒருவரை ஒருவர் சிறந்த முறையில் தொடர்பு கொள்வதும் அறிவுவளர்ச்சி பெறுவதுமாகும். மேலும், மிகப் பெரும்பான்மையான மக்களின் வளர்ச்சி நமது குறிக்கோளாக இருக்க வேண்டுமே யன்றி வாய்ப்பு மிக்க, அவற்றை உருவாக்கிக் கொள்ளும் நிலையிலுள்ள 'உயர்நிலை' யில் தங்களை எண்ணிக் கொள்கின்ற சிலருக்காக அன்று. பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகவே சிறுபான்மையினரால் வலிந்து திணிக்கப் பெற்று இன்றைய நிலையில் வேரூன்றிவிட்ட சாதி, மத, வேறுபாடுகளும் அவற்றால் தாழ்வடைந்த மொழிப்பற்றும் இனப்பற்றும், புறநிலைகளில் அறிவியல் தொழில் நுட்பங்கள் வளர்ந்துள்ள இக்காலத்தும் சிறிதும் மாறாதிருப்பது வருந்தத்தக்கது.

தமிழில் அறிவியல் கருத்துகள் வளராமை, தமிழ்மொழி என்ற கருவியின் குறையன்று. கருவியைக் கையாளாத நம் குறை. 'தமிழால் இயலாது' 'தமிழில் அறிவியற் சொற்கள் இல்லை' 'வளர்ந்து வரும் ஏராளமான அறிவியல் துறைச் செய்திகளைத் தமிழில் கொடுப்பது என்பது ஆகிற செயலா?' என்றெல்லாம் கேட்டுக் கொண்டே முயற்சி செய்யும் சிலரையும் திசை திருப்புகின்றனர். தங்களுக்கிருக்கின்ற இயலாமை, முயற்சியின்மைகளையே மற்றவர்க ளிடத்தும் காண விரும்புகின்றனர். தமிழ் மக்களிடத்திலே ஏற்பட்டுவிட்ட தாழ்வு மனப்பான்மையைப் படித்தவர்கள் தங்கள் தந்நல நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் நிலைதான் இது. தாய்மொழிக் கல்வியைப் பற்றி எண்ணும் பொழுது நாம் மிக நன்றாக ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். மக்களின் அடிப்படைத் தேவைகள் அவர்களாலேயே உணரப் பெற்று அவர்கள் பெற்றிருக்கின்ற அறிவைக் கொண்டு அவர்களின் முயற்சியாலேயே நிறைவேற்றப்படவேண்டிய சூழ்நிலை உருவாக வேண்டும். அந்த அடிப்படை நிலைகளுக்கு வழக்கிலுள்ள தாய்மொழி மட்டுமே பயன்பட இயலும். எனவே, சிறப்பு நிலைகளில் ஒருசிலராலேயே நடத்தப் பெறுகின்ற ஆராய்ச்சிகளைப்பற்றி எண்ணி அவைதாம் பொது மக்களுக்குத் தேவை என்ற மயக்க நிலையை உருவாக்கக் கூடாது.

'தமிழில் கூறினால் விளங்குமா? என்ற கேள்வியை விடுத்து, 'விளங்கும்படியாக எவ்வாறு கூறலாம்?' என்று சிந்திக்க வேண்டும். 'கடினம்' என்று கருதினால் எளிமைப்படுத்துவது தேவை. ஆனால், தேவையற்ற மொழிக்கலப்பினைச் செய்து மொழி யின் வளத்தையும் ஆற்றலையும் குறைக்கக் கூடாது.

www.thamizham.net - Free E book No 7522

அறிவியல் துறைகளில் தமிழ்மொழி வளம் பெற வேண்டும் என்று விரும்பும் நாம் ஏன் தமிழ்மொழி வல்லுநர்களையும் புலவர்களையும் மட்டுமே எதிர்பார்க்க வேண்டும்? அவர்களது துறை மொழித் துறை; அவர்களுடைய முயற்சிகள் தேவையே. எனினும் அவை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நின்று விடுவது இயல்பு. மொழி அறிஞர்களின் துணையுடன் தேவையான அளவு மொழி அறிவைப் பெற்றுத் தங்கள் துறைகளில் பயன்படுத்துவது அறிவியலாளர்களின் கடமை. 'தாய்மொழிக் கல்வி சிறப்பாக அமையப் பெற்றால்தான் அறிவியல் சிந்தனைகள் வளரும்' என்ற அடிப்படை உண்மையை அறிவியலறிஞர்கள் மக்களுக்கு எடுத்துக் கூறுவது செயற்பாடுகளுக்கு வலிவூட்டும். தங்களை ஒரு கூட்டுக்குள் சுருக்கிக் கொள்வதோடு கருத்துகள் மக்களால் அறிய இயலாதபடி தடையாகத் தாங்களே அமைவது அறிஞர்கட்கு அழகன்று. இதுகாறும் செய்யப் பெற்ற முயற்சிகள் குறைவாகவும் அல்லது பயன் நல்காமலும் இருப்பதற்குரிய காரணங்கள் இரண்டு. 1. எல்லாத் துறையினரும் சீரான முயற்சிகள் செய்யவில்லை. 2. ஊக்கக் குறைவுகளாலோ அல்லது தந்நல உணர்வுகளாலோ தொடர்ந்த முயற்சிகள் செய்யப் பெறவில்லை. ஆர்வத்தின் காரணியமாகத் தமிழ் மொழிக்கென்று தொண்டு செய்த பலரும் தங்கள் மூகாமைத் துறைகளினின்றும் விலகிச் சென்று பணி செய்ய வேண்டியிருந்திருக்கின்றது. அவ்வாறு புதுத்துறைகளில் ஈடுபடுவோர்க்குச் சிக்கல்களும் மிகுதி.

இவ்வாறான குறைபாடுகள் களையப் பெறுவதற்கான ஆக்கப் பணிகளில் மாணவர்கள் கருத்துச் செலுத்துதல், மிகத் தேவையானதும், நிறைவான நெடுநாள் பயனை நல்கக் கூடியதும் ஆகும். கற்கும்போதே கல்வி நிலைகளில் உள்ள குறைபாடுகளை உணரத் தொடங்குபவர்கள், நிறைவு பெறாதவர்கள் எதிர்காலத்திலேனும் சீர்திருத்த முயற்சிகளில் ஈடுபடவேண்டும். 'இளமை' ஆற்றல் மிக்கது. புதுமைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடிய தன்மையுடையது. அப் புதுமை நாட்டம் புது நல்லறிவுக் கூறுகளின் மீது திருப்பிவிட்டால் நிறைந்த பயன் விளையும். இப் பருவம் 'தந்நல'ச் சிந்தனைகள் மிகக் குறைவாக உள்ள துடிப்பான பருவம். எனவே இத் தன்மையான மாணவர்கட்குச் சில சிறப்பான உணர்வுகளும் அறிவியல் ஈடுபாடும் தோன்றச் செய்துவிட்டால் அவை அவர்களைத் தொடர்ந்து ஆக்க வழியில் நடத்திக் கொண்டிருக்கும். மொழி, அறிவியல் சார்பான தேவையான திறமைகள் என்று ஒரு சிலவற்றைக் குறிப்பிடலாம். அவை :

1. முதற்கண் மொழியறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்ளுதல்.
2. இயற்கையான அல்லது இயல்பான எழுத்து நடை. அஃதாவது உணர்ந்தவாறு உணரும்படியாக எழுதுதல்.

www.thamizham.net - Free E book No 7522

3. அறிவியல் ஆர்வமும், அறிவியல் நோக்கும் உள்ளத் தமைதல்.

4. அறிவியற் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளுதல், — அறிந்தவற்றை எளிமையாக விளக்குதல், அதற்கேற்ற அணுகுமுறை ஏற்படுத்திக் கொள்ளுதல்.

5. வளர்ந்து வரும் அறிவியல் உலகத்தின் மீது தொடர்ந்து கருத்துச் செலுத்துதல்.

6. அறிவியல் அறிவு மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற கடைமயுணர்வும் அதற்கான செயல் முயற்சிகளும்- பொதுமக்களை நோக்கிய அறிவியல் ஈடுபாடு.

7. திறந்த மனம் கொண்டு அறிஞர்கள் பலரின் ஆய்வறிவினைச் சீர்தூக்கிப் பார்த்துப் பயன்பெற எண்ணுதல்— தேவையற்றவை. காலத்துக்கும் குமுகாய நலனுக்கும் உதவாதவையெனில் அவற்றை விட்டுக் கொடுக்கத் தயங்காமை.

எதிர்காலத் தமிழகத்தை நோக்கிச் செல்லும்போது வளர்ந்து வரும் இளையோர், மாணவர் கூட்டம் நம் கண்களில் முதலில் தென்படும். அவர்களைக் கவர்ந்திழுக்கும் வாயில்களாகிய செய்தித் தாளிகைகள், இதழ்கள் ஆகியவற்றில் நமது கவனம் தேவை. அறிவியற் செய்திகளை எல்லோருக்கும் தருகின்ற ஏடுகள் ஏதுமில. கலைகளுக்காக வளர்ந்துவிட்ட ஏராளமான ஏடுகள் அறிவின் தேவையையே மக்களின் கண்களினின்றும் மறைத்துவிட்டன. இந்நிலை தமிழ்க்குமுகாயத்துக்கு ஏற்பட்ட இழிவான இன்னல் நிலை. புற்றீசல்கள் போல மலிந்து கிடக்கும் பல, கலையெனும் பெயரில் கொலை செய்து வருகின்ற ஏடுகளுக்கிடையில் அறிவு நோக்கில் எந்த ஏடும் வெளிவருவதில்லை. இதற்கு உண்மையான கரணியம், அறிவியல் அறிஞர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பலரும், வகுப்பறைகளிலோ அல்லது ஆய்வுக் கூடங்களிலோ மட்டுமே அவ்வாறு நடந்து கொண்டு வெளியுலகில் எவ்வகை ஈடுபாடும், மக்கள் மீது நாட்டமும் இல்லாதிருப்பதும், அதற்கும் மேலாகத் தம் அறிவின் மீது நம்பிக்கையும் மதிப்பும் இல்லாதிருப்பதும் என்று உறுதியாகக் கூறலாம். பல கல்லூரி மலர்களிலும்கூடக் கலைச் செய்திகள்தாம் மிகுதியே தவிர அறிவுத்துறைச் செய்திகள் தேவையான அளவில் இருப்பதில்லை. இவை அறிவியல் அறிவார்வமற்ற நிலையைக் காட்டுகின்றன. அளவுக்கு மீறிய துய்ப்புணர்வு அல்லது பொழுது போக்குணர்வு நிலை தன் வயமிழந்த வறிஞனின் ஏக்க நிலையை யொத்தது எனலாம். நெடுந்தொலைவு வளர்ந்திருந்தும், மக்களின் மனத்தில் அறிவியல் உணர்வு பற்றுததன் கரணியத்தால், அறிவியல் உணர்வூட்டுகின்ற சிறந்த வாயிலாகிய

www.thamizham.net - Free E book No 7522

தாய்மொழிக் கல்வி சிறக்காத காரணியத்தால், நம் நாட்டில் இக்கால அறிவியல் வளர்ச்சிக்கான எவ்வகை அடிப்படையும் அமையாமல் போயிற்று. இவ்வுண்மைகள் மக்களின் மனவியல் அறிந்தவர்களுக்கு எளிதில் விளங்கும். எனவே, அறிவியல் வளர்ச்சிக்கு மக்கள் மனங்களிலே அடிப்படையிடுவது முதாமையானது. தன்னம்பிக்கையுணர்வூட்டப் பெறவேண்டும். அதற்கடிப்படையான- 'நம் மக்களிடையே அறிவியலுண்டு, நம் நாட்டிலே அறிவியலுண்டு நம் முன்னோர்கள் அறிஞர்கள், நம் பண்டைய நூல்கள் அறிவு நூல்கள், நம்மொழி அறிவியல் மொழி, அறிவியற் கேற்ற மொழி' என்ற உணர்வுக் கருத்துகள்தாம் ஒருவனை 'நாமும் சிந்திக்க இயலும், செயல்பட இயலும், அறிய இயலும், ஆக்க இயலும்' என்றெண்ணத் தூண்டும். எவ்வாறு சுற்றுப்புறம் தூய்மையாக இல்லாதபோது நம் இல்லத்தில மட்டும் தூய காற்றை வரவழைக்க இயலாதோ, அதேபோல நாம் வாழும் குமுகாயம் அறிவு, ஆக்க வுணர்வுகளால் அமையப்பெறாத போது தனி மாந்த வளர்ச்சியும் பொருளற்ற தாகிவிடும்.

இறுதியாக, அறிவியலின் புறவளர்ச்சி விளைவுகளான பல கேடுகள் உலகம் முழுவதுமுள்ள மக்களைச் சீரழிப்பதையும் விளங்கும் படி கூறவேண்டும். 1. அணுப் போர்க்கருவிகளின் வளர்ச்சி நிலையால் தீங்குகள், 2. காற்று, நீர், நிலத்தூய்மை யிழப்பு அல்லது அவற்றில் நச்சுக் கலப்பு (Pollution), 3. கனிம, ஆற்றல் மூலங்கள் அருகி வரும் நிலையில் ஏற்பட்டுள்ள ஆற்றல் மூலத்தட்டுப்பாடு (Energy Crisis), 4, பலவகை நோய் நுண்ணுயிரிகளும் பொதுவான மருந்துகளுக்குக் கட்டுப்படாமல் எதிர்ப்பாற்றல் (Immunity) பெற்றுள்ள அதிர்ச்சி தரும் நிலைகள் முதலிய பல தீவிரச் சிந்தனைக்கும் எல்லா மக்களின் கவனத்துக்குமுரிய நிலையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

ஏழைமையும் ஏந்துகளின்மையுந்தாம் நம்மிடம் நிலவும் குறை என்ற பொதுக், கருத்தும் வளர்ச்சிகளைக் கண்டு மலைக்கும் தன்மையும் நம்மை விட்டகன்று தேவைகளை நன்குணர்ந்து தம் முயற்சியால் செயல்பட இயலும் என்ற உணர்வு மாணவ, இளையோர்களிடையே எழும்பொழுதே நல்ல எதிர்காலம் முளைவிடுகின்றதென்று கூற முடியும். இப்பொழுதுள்ள நிலையை எளிதில் மாற்றிவிட முடியுமென்றோ அல்லது இதே நிலைதான் என்றும் இருக்கும் என்றோ நாம் கருதுவது தவறு எனவே, வலுவான அடிப்படைக்குரிய நிலை டல் இன்றைய மாணவர்களும், அறிவியலாளர்களும், மற்ற துறை அறிஞர்களும் உண்மையான பொது நலவுணர்வோடும் பொறுப்போடும் இணைந்து தங்கள் ஆற்றலைச் செலவிடுங்கால் எதிர்கால த தமிழகம் நெடுநாட்களுக்குமுன் இழந்துவிட்ட சிறப்பு நிலைகளில் ஒரு சிலவற்றையேனும் மீட்டிருக்கும் என்று உறுதியுடன் கூறலாம

www.thamizham.net - Free E book No 7522

விடுதலை வந்ததா?

— தமிழ்வேள்.

எனக்கு விடுதலை வந்ததா? எங்கே?
எனக்கு விடுதலை வந்தது மெய்யெனில்,
என்மொழி அஞ்சல் தலைகளில் ஏனில்லை?
என்தாய் மொழியில் தொலைவரி ஏனில்லை?
என்மொழி என்னாட்டுக் காசுகளில் ஏனில்லை?
என்தாய் மொழிக்கே முதலிடம் ஏனில்லை?

எனக்கு விடுதலை வந்ததா? எங்கே?
எனக்கு விடுதலை வந்தது மெய்யெனில்,
என்தமிழர் எங்கும்ஏன் துன்பப் படுகின்றார்?
என்தமிழ் மக்கள் இழிந்தவராய் ஏனுள்ளார்?
என்தமிழர் இன்னும்ஏன் இரந்து வாழ்கின்றார்?
என்மக்கள் வேற்றுமொழி பள்ளிக்கேன் போகின்றார்?

எனக்கு விடுதலை வந்ததா? எங்கே?
எனக்கு விடுதலை வந்தது மெய்யெனில்,
என்மொழியில் இங்கே இறைவழிபா(டு) ஏனில்லை?
என்இறையைப் போற்ற உரிமையெனக்(கு) ஏனில்லை?
என்னாட்டை மற்றவர்கள் ஏன்சுரண்டிச் செல்கின்றார்?
என்னாட்டார் யார்யார்க்கோ ஏன்அடிமை யாய்உள்ளார்?

எனக்கு விடுதலை வந்ததா? எங்கே?
எனக்கு விடுதலை வந்தது மெய்யெனில்,
என்மொழி ஏடெல்லாம் யாரோ நடத்துவதேன்?
என்மொழியின் தூய்மையினை யாரோ கெடுப்பதுமேன்?
என்னாட்டில் எத்துறையும் யார்யாரோ முன்னிற்க
என்தமிழர் பின்னுக்குத் தள்ளப் படுவதுமேன்?

எனக்கு விடுதலை வந்ததா? எங்கே?
எனக்கு விடுதலை வந்தது மெய்யெனில்,
என்தமிழர் பண்பெல்லாம் ஏன்அழிந்து போகிறது?
என்தமிழர் நாகரிகம் ஏன்மாறி நிற்கிறது?
என்தாயை என்னாட்டார் போற்றாமல் மாற்றாரின்
முன்சென்(று) அவர்தாயை மண்டியிட்டுப்
போற்றுவதேன்?

எனக்கு விடுதலை வந்ததா? எங்கே?
எனக்கு விடுதலை வந்தது மெய்யெனில்,
என்மக்கள் பல்லோர் இரவுணவும் இல்லாமல்
நன்றால் உடுக்க ஒருதுணியும் இல்லாமல்
பன்றிகளும் கால்வைக்கக் கூசும் இடங்களிலே
சென்றிருந்து நொந்துநொந்து சீரழிந்து வாழ்வதும்ஏன்?

www.thamizham.net - Free E book No 7522

சென்ற இதழ்த் தொடர்ச்சி தொடர்: 8

சிலம்பிற் பிழையா?

— புலவர். இறைக்குருவனார்.

தயிரும் மோரும்

> "குரவைக்கூத்து நிகழ்வதற்கு முதல் நாளிலல்லாமல் அக் கூத்து நிகழ்வதற்குச் சற்றுமுன்பே கண்ணகி சமைத்துப் படைத்த உணவைக் கோவலன் உண்டுவிட்டுச் சென்றான் என்பது ஆதாரமற்ற உறழுரை (வாதம்) ஆகும்."

என அடித்துப் பேசித் தமது கூற்றுக்கு ஆதாரங்காட்டப் புகுந்து தயிர்ப் பானையைத் துழாவி,

> "ஆய்ச்சியர் இல்லத்தில் கோவலன் உணவு கொண்டான் என்றால், தயிரோ மோரோ இல்லாமலா உணவை உண்டிருப்பான்?.... குடப்பால் உறையாத நிலையில் கோவலன் உண்ணுதற்குத் தயிரோ மோரோ கிடைத்திருக்குமா?"

என வினாக்கணை தொடுக்கிறார் ம.பொ.சி. தயிரோ மோரோ இல்லாவிட்டால் கோவலன் முறுக்கிக் கொண்டு போய்விடுவான் போலும்!

"இடைக்குல மடந்தையர் இயல்பிற் குன்றா
மடைக்கலந் தன்னொடும் மாண்புடை மரபிற்
கோளிப் பாகற் கொழுங்கனித் திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத் தீங்கனி
சாலி யரிசி தம்பாற் பயனொடு
கோல்வளை மாதே கொள்கெனக் கொடுப்ப"

என்றார் ஆசிரியர். இடைக்குல மடந்தையர் கண்ணகிக்கு மடைக்கலங்களொடும் கோளிப்பாகல் முதல் சாலி யரிசி ஈறான பலவற்றையும் தம் 'பாற் பயனொடு' கொடுத்தனர் என்றமையால் அப் பாற்பயன் ஏனையவற்றினும் மேற்பட்ட நிலைத்தாக வைத்துச் சிறப்பித்துரைக்கப்பட்டுள்ளது.

பாலும் பயனும்

'பாற்பயன்' என்பதற்கு அருஞ்சொல் உரைகாரர் பாலாகிய பயன் என்று ஒன்றாகப் பொருள் விரித்தார். மற்று அடியார்க்கு நல்லாரோ அதனை உம்மைத் தொகையாக் கொண்டு பாலும் நெய்யும் அளித்தனர் என்றார்.

பாலும் அதன் பயனும் என்பதற்குப் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் என்றெல்லாங் கொள்ளலாமேனும், அடியார்க்கு நல்லார் 'இனி மற்றை நாட் செய்தி கூறுகின்றார்' என்று கூறி, இடைக்குல மடந்தையர் கொடுத்தமையை மறுநாட் காலை நிகழ்ச்சி

www.thamizham.net - Free E book No 7522

யாகக் கூறுதலானும், அந்நாளில் குடப்பால் உறையாமையால் தயிரும் மோரும் வெண்ணெயும் இல்லாமையானும், முன்னாள் வெண்ணெயும் உருகியமையானும் அவர் இடைப்பட்ட மூன்றுந் தவிர்த்துப் பாலும் நெய்யுமே கூறினர் என்பது நுணித்துணரக் கிடக்கின்றது. இஃதுணரமாட்டாத பின்னை உரையாசிரியர்களான நாவலர் **ந.மு. வேங்கடசாமியாரும்**, பெருமழை **பொ. வே. சோமசுந்தரனாரும்** தாம் அறிந்தனவெல்லாம் கூறி நிரப்பி இழுக்கினர். இது நிற்க!

அடியார்க்கு நல்லாரை ஆராயப்புகுந்து பன்னூறு பக்கங்களிற் பலபட விரித்தெழுதிய பர். **ச.வே.சுப்பிரமணியம்** அவர்கள், நல்லாரின் நுழைபுல வன்மையைப் புலப்படுத்தி நிற்கும் இன்னோரன்ன இடங்களைக் கண்டு காட்டிலர். அன்றியும் இக் கட்டுரைக்கு நிலைக்களனான சிக்கலை மற்றவர் வழிநின்று சுட்டிக்காட்டிய அளவில் தாம் பட்டுக்கொள்ளாமலே நழுவிக் கொண்டார்.

கோவலன் தயிரோ மோரோ இன்றியேதான் உண்டான் என்று அடியார்க்கு நல்லார் கூற்றால் அறியப்படுவதாயிருப்ப ம.பொ.சி. யின் வினா பொருளிலதாய் ஒழியுமாறு காண்க!

தனிமை நிலைமை

"கருங்கயல் நெடுங்கண் காதலி தன்னை
ஒருங்குடன் தழீஇ உழையோ ரில்லா
ஒருதனி கண்டுதன் உள்ளகம் வெதும்பி"

என வருங் கொலைக்களக் காதைப் பகுதிக்கு உரையெழுதப் புகுந்த, அடியார்க்கு நல்லார் "

'உழையோர் இல்லா' எனவும், 'ஒரு தனிகண்டு' எனவுங் கூறினர், ஆய்ச்சியரெல்லாங் குரவையாடப் போனமை தோன்ற" என்று எழுதியுள்ளார்.

கோவலன் கரிய கயல் போலுங் கண்ணையுடைய தன் காதலியை மெய்ம்முழுதும் தழுவினான் என்றலின், அப்பொழுது அருகில் யாருமிலர் என்பதும், அந்நிலையில் அவளை விட்டுப் பிரியும் அவன் ஆருயிர் மனைவி, அருகில் யாருமின்றித் தனியளாய் இருந்த நிலையை எண்ணியே கண் கலங்கினான் என்பதும் தெளிவு.

ஆங்கு அருகில் இருக்கத் தக்கார் ஆய்ச்சியரே யாதலானும், அவர்தாமும் இல்லாது தனியளாய் இருந்தமையே அப் பகற்போதிலும் அவளை ஆரத் தழுவுதற்கு வாய்ப்பாய் இருந்தமையானும் அந்நிலையில் ஆய்ச்சியர் யாண்டுச் சென்றிருத்தல் கூடும், என எண்ணிப் பார்த்த அடியார்க்கு நல்லார் 'ஆய்ச்சியரெல்லாம் குரவையாடப் போனமை தோன்ற'' என்று எழுதியுள்ளார்.

www.thamizham.net - Free E book No 7522

குரவைக் கூத்தும் கொலை நிகழ்ச்சியும் ஒருநாளில் நடந்தன அல்ல என்று ம.பொ.சி.யும் மற்றவர்களும் கொண்ட முடிபிற்கு அடியார்க்கு நல்லார் கூற்று இடையூறாக நிற்றலால், கோவலன் சற்று முன்னர்க் 'குடிமுதற் சுற்றமும்' என்பது முதலாகச் சில கூறிக் கண்ணகியின் நலம் புனைந்துரைத்தலையே பின்னுங் கருதினான் என்றுரைத்து உழையோர் இல்லா ஒரு தனி நிலையாவது,

"தாய்-தந்தை, மாமன்-மாமியார், குற்றேவன்
மகளிர் ஆகிய பழகியோர் இல்லாமையே"

என்ற பிறிதொருவர் கருத்தையும் கூற்றையும் எடுத்துக்காட்டி, நல்லார்கூற்றை மறுத்துரைக்கின்றார் சிவஞானம்.

அவர் காட்டும் அவ் வுழையோர் இல்லா ஒரு தனிநிலை ஈண்டுக் கோவலன் கண்ணகியை ஒருங்குடன் தழுவுதற்கு வாய்ப்பான தனிமை எனலாகாமையின் அவ்வாறு கூறுதல் பொருந்தாமை யறிக! அன்றியும் அவர்கள் தழுவுங்கால் ஆய்ச்சியரும் உடனிருந்தனர் கொல்! என்னும் நகையாட்டுக்கும் இடனாம்.

பல்தலை விளைக்கள்

தம் 'பிழை' முடிபை வலியுறுத்த மேற்காட்டியாங்குத் தயிர்ப் பானையிலும் தலையிடும் சிலம்புச் செல்வர், ஒருநாளில் வெட்டுண்ட உடல் அந்நாள் எச்சப் பொழுதும் இராவும், பின்னாள் முழுதும் கிடத்தல் இயலுமா? வெட்டிய உடலை அப்படியே விட்டுப் போய் விடுவதுதான் செங்கோல் வேந்தன் தண்டனை முறையா? ஊரவரும் வாளா இருந்தனரா? அரசத் தண்டனை என்று கருதி அங்ஙனம் அவர்கள் அமைந்திருப்பினும் காக்கை கழுகு நாய் நரிகளும், ஈ எறும்புகள் முதலாயினவு மெல்லாம் அடங்கி யிருந்தனவா என்றும், பிறவாறும் பலதலையான் நிகழும் விளைக்களைச் சற்றும் எண்ணிப் பாராது, கோவலன் வெட்டுண்ட மறுநாள் மாலையே கண்ணகி அவனை-அவன் பிணத்தைச் சென்று கண்டாள் என்று கூறுதல் எத்துணை பொறுப்பற்ற கூற்று என்பதை எண்ணிப் பார்மின்!

முடிபு

இதுகாறும் கூறியவாற்றான் கோவலன் பிரிவும் குரவைக்கூத்தும் ஒருநாள் நிகழ்ச்சிகளேயாம் என்பதும், கோவலன் வெட்டுண்டதும் கண்ணகி அவனைக் கண்டதும் அன்றேயாம் என்பதும், 'வண்டார் இருங்குஞ்சி' என்னும் பாடலில் இடம் பெற்றுள்ள காலையும் மாலையும் ஒருநாளினவேயாம் என்பதும், இப் பாட்டிலோ உரையாசிரியர்களின் கூற்றிலோ 'பிழை'யுமில்லை 'இளங்கோவடிகட்கு' மறதி புமில்லை என்பதும், இதுபற்றித் திரு வ.சுப. மாணிக்கமும், திரு ம.பொ.சி யும் மற்றவர்களும் கூறுவன வெல்லாம் பொருந்தாதனவாம் என்பதும் முடிபு செய்யப்பட்டன.

வெளிநாடுகளிலும் வெட்டிவேர் நறுமணம்!

(தமிழ்மணி அரங்க முருகையன், இலண்டன்)

தமிழ்நாட்டுக்கு அப்பால் ஏழாயிரம் கல் தொலைவிலுள்ள கடல் கடந்த நாடான இவ் விங்கிலாந்தில் வெட்டிவேர் மட்டிலா மணம் பரப்பி வருவதை-நான் கண்டறிந்த வகையை சொல்லப் புகுமுன், அவ்வாறு கண்டறியக் கரணியமாயமைந்த-இங்கு நான் ஆற்றும் பணியைக் குறிப்பிடுதல் உகந்ததாயிருக்கும் என்றெண்ணுகிறேன்.

இலண்டன் மாநகரின் ஈத்ரோ வானூர்தி நிலையத்தில் அமைந்துள்ள 660 அறைகள் கொண்ட தங்கும் விடுதி (Hotel) ஒன்றில் சிறு மின் கருவிகள், மின்குமிழ்கள், எழுதுவினைக் கருவிகளைக் கொண்ட பண்டகசாலைப் பொறுப்பாளனாக இங்கு நான் பணியாற்றி வருகிறேன். என் மேலதிகாரி விடுப்பில் செல்லுகையில் அவர் பணிகளையும் நான் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

அண்மையில் இவ்வாறு என் மேலதிகாரி விடுப்பில் சென்றபோது, அவர் கேட்டிருந்த வழலைக் (Soap) கட்டிகள் வந்தன. அவற்றை எண்ணிச் சரிபார்க்கையில் சில வழலைக் கட்டிகளின் மேல் தென்பட்ட வெட்டிவேர் (Vetyver) என்னுஞ் சொல் என் கண்ணில் பட்டது. அச் சொல்லைப் பார்த்தவுடனேயே அஃது தமிழ்ச் சொல்தான்-நம் வெட்டிவேர்தான்-என்று எனக்கு உறுதியாகத் தெரிந்தாலும் அவ் வழலைக்கட்டிகள் பிரான்சு நாட்டில் உருவானவையாகையால் அம் மொழியில் (எனக்குப் பிரெஞ்சு மொழி தெரியாது) அச் சொல்லுக்கு வேறு பொருளிருக்குமோ என்ற சிறு ஐயமும் ஏற்பட்டது.

அன்று மாலை என் ஆங்கிலேய நண்பர் திரு. பெர்க்க சிமித் என்னைப் பார்க்க வந்தார். ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் வரலாற்றினைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு முதுகலைத் தேர்வில் தேறிய அவர், தமிழ்மொழி, தமிழர் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றில் நிரம்ப ஈடுபாடு கொண்டவர். உரோமன் கத்தோலிக்கக் குடும்பமொன்றில் பிறந்தவராயினும் தமிழரின் தொன்மை மதங்களுள் ஒன்றான சிவனிய நெறியில் திளைக்க விரும்புபவர். சிலப்பதிகாரத்தைத் தமிழிலேயே படித்தறியுமளவுக்கு அவர் இன்னமும் தமிழில் புலமை பெறாததால் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்துச் சுவைத்து இன்புறுபவர். புத்த சமயம் சீன நாட்டில் பரவக் காரணமாயிருந்தவர், காஞ்சியைச் சேர்ந்த போதி தர்மன் என்ற தமிழரே என்று தாம் கற்றறிந்ததை நம்மிடம் சொல்லி மகிழ்பவர். தமிழில் பேசிப் பழகுவதற்காக என்னையும் என் பிள்ளைகளையும் தேடி அடிக்கடி வருவார்.

www.thamizham.net - Free E book No 7522

நண்பர் திரு. பெர்க்சு சிமித்துக்குப் பிரெஞ்சு மொழி தெரியும். ஆகவே, அவரிடம் வெட்டிவேர் மணங்கமழும் வழலையைக் காட்டி, "இவ் வெட்டிவேர் தமிழ்ச்சொல். தமிழரின் வெட்டிவேர் நறுமணம் பிரெஞ்சுக்காரர்களையும் மயக்கியிருக்கிறது!" என்றேன். ஆனால் நான் சொன்னதை முழுமையாக விளங்கிக் கொள்ளாமல், திரு. பெர்க்சு சிமித். 'பிரெஞ்சுக்காரர்கள் நறுமணப் பொருள்கள் உருவாக்குவதில் வல்லவர்கள்' என்றார். நான் 'ஐயா, நறுமணம் என்று பொருள் தரும் Fragrance என்ற சொல்லே தமிழ் 'விரை' என்னும் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்தது தான். [1]Virai > Vrai > Frai > Frag என ஆகி இலத்தீனுக்குச் சென்று, ஆங்கிலத்துக்கு Fragrance என வந்துள்ளது. இவ்வாறே, [2]சாந்து (சந்தனம்) என்ற தமிழ் வேர்ச் சொல் ஈறுகெட்டு இலத்தீனில் 'சாந்த்' என வழங்கிப் பின் அல் விகுதி ஏற்றுச் சாண்டல் (Sandal) என ஆகிப் பழைய பிரெஞ்சு மொழிக்கும் ஆங்கிலத்துக்கும் சென்றது" என விளக்கினேன்.

"கழகக்காலத் தமிழர்கள் நாகரிகத்தின் உச்சியில் நின்று திளைத்தனர். இயற்கை நறுமணப் பொருள்களைப் பெரிதும் விரும்பினர். இந்நாளிலும் தமிழ்நாட்டுப் பெண்கள் மரு, மருக்கொழுந்து போன்ற மணங்கமழும் இலைகளையும், வெட்டிவேர் போன்ற மணம்நல்கும் வேர்களையும் பூக்களொடு வாழைநார் கொண்டு தொடுத்துப் பூச்சரமாகக் கூந்தலில் அணிந்து மகிழ்வர். தவிரவும், வெட்டிவேரினை விசிறி போலாக்கி இளவேனிற் காலத்தில் அதில் குளிர் நீர் தெளித்து விசிறிக்கொள்வர்." என்றேன் உணர்ச்சிப் பெருக்குடன்.

"அப்படியா!" என வியந்து நின்றார் நண்பர் பெர்க்சு சிமித்.

மேற்கண்ட வழலையில் காணப்பெற்ற வெட்டிவேர் என்ற சொல் நம் வெட்டிவேர்தானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமன்றோ? அவ் வழலையை அனுப்பிய நிறுவனத்துக்கு மடலொன்று விடுத்தேன். அவர்களும் என் கருத்தை உறுதிப்படுத்துதல் போன்று, "அஃது யாவாவில் (சாவகம்) காணப்பெறும் ஒரு வேர்" என்று மறுமொழி நல்கினர். அந் நிறுவனத்திலிருந்து வந்த கடிதத்தின் படியினைப் பின்பக்கம் காண்க :-

---

1. விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து...(திருமுருகாற்றுப் படை)
2. பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை ..(கலித்தொகை)

1, 2. இவை, ஐரோப்பிய மொழிகளுக்குத் தமிழ் வழங்கிய கொடை (Tamil-Its Contribution to the Europeon Languages) என்ற பெயரில் திரு கே.சி.ஏ. ஞானகிரி அவர்கள் ஆக்கிய ஆய்வு நூலிலிருந்து எடுத்தாளப் பெற்றவை.

www.thamizham.net - Free E book No 7522

Dear Sir,

Thank you for your letter of 16th August, and we are pleased to note that you liked the Roger & Gallet soap VETYVER, which you found at a Trust House Forte hotel.

In reply to your query, VETYVER (OR VETIVER) IS IN FACT A ROOT FROM JAVA.

We thank you for your interest in writing and you will be pleased to learn that you can buy VETYVER soap in most Departmental Stores and high class chemists, ranging from a 150 gr (Bath Soap x 3, Bath soup single, Toilet soap x 3 (100gr).Toilet Soap single, and we also have a range of Eaux de Vetyver, starting from 200 ml.bottle to a 50 ml. size, which is a fragrance for both men and women.

Yours faithfully,
Bergal Limited
(Sd) ————————
Barbara Griffiths
Secretary to Managing Director.

தமிழ் மண்ணில் தோன்றிய வெட்டிவேர் பல்வகை நறுமணப் பொருள்களோடு தமிழ்நாட்டினின்று திரைத்தசாவகம்சென்று அங்கிருந்து தொலைவிலான பிரான்சு மற்றும் பிரித்தானிய நாடுகளில் மட்டிலா பணம் பரப்புவதை எண்ணி மகிழ்ந்து கண்ணீர் பெருக்கினேன்.

"தமிழ் அன்னாய்! உன் சீரிளமைத் திறம் (திறன்)
வியந்து செயன் மறந்து வாழ்த்துதுமே!"

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம் :	8 ,,	18 ,,	18 ,,
தனியிதழ் :	1-25 ,,	3 ,,	3 ,,

ஓரிதழுக்கு உருபா 2.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

www.thamizham.net - Free E book No 7522

ஆகம வரலாறு-திருக்குறளில் ஆகமம்

— சே. வெ. பலராமன், சேலம்-1

ஆகமம் என்னும் சொல் '**வந்தது**' என்னும் பொருள் தருவதும் ஆகமம் என்னும் வடசொல்(!)லுக்கு ஈடாகத் தொல்வரவு என்னும் தமிழ்ச் சொல்லை ஆளுவர் திருவள்ளுவர். '**தொல்வரவும் தோலும்**' என்று வரும் தொடர் காண்க. (குறள்-1043). இத்தொடர் தொல்காப்பியத்தில் தொடர் நிலைச் செய்யுளியலின் நூல் வனப்பைக் கூறுமிடத்து,

> தொன்மைதானே சொல்லுங் காலை
> உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே. (229)
>
> இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
> பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகினும்
> தோலென மொழிப தொன்னெறிப் புலவர் (230)

மேற்கண்ட நூற்பாக்களுக்கு நச்சினார்க்கினியர், பேராசிரியர், இளம்பூரணர் போன்ற உரையாசிரியர்கள் ஒருவகைச் செய்யுள் நூல் என்று உரை காண்கிறார்கள்,

நச்சினார்க்கினியர் உரை:- பொருளதிகாரம் —செய்யுளியல்—எண் —550, 551. பக்கம் எண்=யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் (பிள்ளை) பதிப்பு - 770, 771. காண்க (1885-ஆம் ஆண்டுப்பதிப்பு) **பேராசிரியர் உரை**:- பொருளதிகாரம் —செய்யுளியல்—கழகப் பதிப்பு பக்கம் எண்-427; 429 தொன்மையுணர்த்துதல் நுதலிற்று என்று கூறுகிறார்.

இளம்பூரணர் உரை:- கழகப் பதிப்பு —பக்கம் எண்.-548. பொருளதிகாரம்—நிறுத்த முறையானே தோலாகிய தொன்மைச்செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று என்று கூறுகிறார்.

திருக்குறள் - காளிங்கர் உரையில்:- தொல்வரவு என்பது தொன்று தொட்டு வருகின்ற குடிவரலாறு என்று கூறுகிறார். ஆக, மேற்காட்டிய சான்றுகளால் தொல்காப்பியர் தோலெனக் கூறுவது ஒருவகை நூல் என்பதில் ஐயமில்லை. அத் தோலோடு தொல்வரவு என்பது குறளில் இணைத்துக் கூறப்படுவதால் இதுவும் —இத்தொல்வரவும் ஒருவகை நூலாகவே முடியும்.

ஆகமம் என்பதும் தொல்வரவு என்பதும் தொன்றுதொட்டு வந்தது என்று பொருள் தரக்கூடியது. எனவே, தொல்வரவு—ஆகமம். இன்று வடமொழியில் காணப்படும் ஆகமங்களில் பிற்காலத்தார் கூற்றும் கலந்து காணப்படுமேனும் அவற்றின் மூல மெய்ப்பொருளெல்லாம் - பண்டு இருந்த தமிழ் மந்திர மறைகளில் - தொல் வரவுகளில், ஆகமங்களில் கூறப்பட்டனவே ஆகும். இதற்குத் தொல்காப்பியமே போதிய சான்றாக நிற்கும். இன்றைய வடமொழி ஆகமங்கள் தமிழ்ச் சான்றோரால் தம் மரபில் தொன்றுதொட்டு

www.thamizham.net - Free E book No 7522

வழிவழிவழங்கிய அருங்கருத்துகளைக் காக்கும் நோக்கோடு வடமொழியின் சாய்காலினால் மயங்கி அம் மொழியில் எழுதப் பட்டனவே ஆகும்.

தொல்லோர்குறித்து வைத்த அருமறை நுட்பங்களோடு அவ்வம் மரபில் வரும் பின்னையோரும் தாம் கண்டவற்றைச் சேர்த்துக் குறித்துக் கொண்டு வருவர். இங்ஙனமே தொல்வரவுகள் விரிவுற்றுப் பண்டை அறிவர்பால் இருந்தன. அத் தமிழ்த் தொல்வரவுகள் அழிந்து விட்ட பின் அகப்பட்டிமை மிஞ்சி 'வைதிகம்' ஓங்கிவிடவே, தமிழர் இடைக் காலத்தில் தம் அறம் யாது? அறவோர் யாவர்? அறநூல்(மறை)யாது? அம் மறை வகுத்து ஓதிய ஆசான் யார்? என அறிந்து அவ் வறநெறியைச் சார்ந்து பின்பற்றாது போயினர். இதனால் அறம் சாரா நல்குரவு (குறள் - 1047) நாட்டு மக்களிடையே பரவிற்று. அதனால் பழந்தமிழ் நூற் செல்வங்களெல்லாம் கெட்டன என்பர் பேணுவாரற்றுச் செல்லரித்து ஒழிந்தன சில. நல்வினைப் பேறு கருதி ஆற்று வெள்ளத்திடை அப்புறப்படுத்தியவை சில. நெய்யில் தோய்த்து நெருப்பிடப் பட்டன சில. இக் கருத்துகளையெல்லாம் கண்டு வயிறெரிந்து "அருமறை சோரும் அறிவிலான்" (குறள் — 847) என்று வள்ளுவர் வருந்துவார்.

மேற்படி குறளுக்கு அழகர், "பெறுதற்கு அரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன்" என்று உரைகண்டு உண்மை உணர மாட்டாது திசை திருப்புவார். மேற்படி குறளுக்கு அருமறைகளை — தொன்றுதொட்டு வழிவழிவந்த மறைகளைக் குடிமைப்பண்பு இழந்து, அடிமைப்பட்ட நிலையில் காப்பாற்றாது, ஒழிந்துபோன, தனக்குத் தானே செய்து கொண்ட பெருமிறையை — புல்லறிவாண்மையை, யானை தன் தலையிலேயே மண்ணைவாரிப் போட்டுக் கொள்ளுதல் போல என்று கூறி வருந்துவார், நிற்க.

அருமறையாவது, கிறித்து சமயப் பெரியோர்களிடை 'பைபிள்-விவிலியம்' என்றும், முகமதிய சமயத்தாரிடை 'குர்-ஆன்' என்றும் பவுத்தரிடை 'தம்மபதம்' (பிடக நூல்) என்றும், சமணரிடை 'அணுவிரதம்' என்றும்,வடமொழியாளர்களிடை பிரம சூத்திரம் 'உபநிசத்துகள் பகவத் கீதை,' என்றும் ஆரியர்களிடையே ரிக். யசுர், சாம, அதர்வண மாகிய வேதங்களாகவும் பேசப்படுகின்ற செய்தி-யாவரும் அறிந்ததே.

அதுபோல, "கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்த குடி" யாகிய தமிழ் இன மக்களுக்கு என்று உள்ள 'பழமறை' யாது?

தமிழ் நாட்டின் பழைய சிவனிய மதம், மாலிய மதம் போன்றவற்றில் பேசப்படுகின்ற "அறமுதலர நான்கு", "அன்று ஆலின்

www.thamizham.net - Free E book No 7522

கீழ் அற முரைத்தான்", (திருச்சாழல்-திருவாசகம்) "பண்டை நான்மறையும்', (திருவாசகம்). மூவா நான்மறை முதல்வா போற்றி, "ஆகமமாகி நின்றண்ணிப்பான்", "மந்திர மாமலை மகேந்திரத் திருந்து சுந்தர ஆகமம் தோற்றுவித்தருளி" (திருவாசகம்); "கல்லாலின் புடையமர்ந்து நான்மறை" (திருவிளையாடல்), "அன்றால நீழற்கீழ் அறம் நால்வர்க்கு மேலையுகத்துரைத்தான் மெய்த்தவத்தோன், (நாலாயிரப்பிரபந்தம்)," நெறிவாசல் தானே ஆய் நின்றானை ஐந்து பொறிவாசல் போர்க்கதவம் சார்த்தி அறிவானும் ஆலமர் நீழல் அறம் நால்வர்க்கு அன்றுரைத்த ஆலமமர் கண்டத்தரன்' (நாலாயிரப்பிரபந்தம்), என்று ஆயிரக்கணக்கான மேற்கோள்கள் பழைய தமிழ்ச்சமய இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்ட இயலும். விரிவஞ்சி விடுத்தனம். அன்றியும் மறைமலை அடிகளார் தம்முடைய "தமிழர் மதம்" "வேளாளர் நாகரிகம்" 'திருக்குறள் ஆராய்ச்சி" "திருவாசக விரிவுரை" "மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்" போன்ற நூல்களில் தமிழ் நான்மறை என்பது திருக்குறள் போன்ற அமைப்பையுடையது என்று முடிந்த முடிபாகக் கூறுகிறார்கள். தமிழ் "திருநான்மறை விளக்கம்" என்ற கட்டுரைத் தொகுப்பு 'செந்தமிழ்ச் செல்வி' திங்களிதழில் பத்துக் கட்டுரைகளில் திருக்குறள் போன்ற அமைப்புடையது என்று உறுதி செய்திருக்கிறார்கள். மிக அண்மையில் வெளியிடப்பட்ட "ஆழ்கடல் மர்மங்கள்" (The Riddles of three Oceans.) என்ற நூலிலும் பழந்தமிழர் நாகரிகத்தைப் பற்றியும், கடல் கொண்ட இலெமூரியாக்கண்ட நாகரிகத்தைப் பற்றியும் அவர்களுடைய தந்திர மறைகளைப் பற்றியும் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்துக் கீழ்க்காணும் முடிவுக்கு வரலாம்.

வள்ளுவர் வாழ்ந்த காலத்திலேயே ஆரியக்கயமை சூழ்ந்து விட்ட நிலையும் மறைகள் திட்டமிட்டு மறைக்கப்பட்ட நிலையும் தமிழருடைய பழந்தமிழ் ஒழுக்க நூலாம் அறஆழி போன்ற நூல்கள் அடிச்சுவடு தெரியாமல் அழிக்கப்பட்ட நிலையும், வள்ளுவர் காலத்துக்கு முன்பு இருந்த தமிழர் இறைக்கொள்கையும் வழிபாட்டு முறையும் (இறைவனை வழிபட இருந்த வழிமுறைகள்) என்ன என்று அறிந்து கொள்ள முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டு விட்டது என்பதைத் தம்முடைய "அறஞ்சாரா நல் குரவு" என்ற (1047) குறளில் நன்கு வலியுறுத்துகின்றார். அடுத்து வரும் திருக்குறள் ஆய்வு நூல்கள், கட்டுரைகள் திருக்குறளைப் பற்றிய உண்மையைத் தூண்டுவனவாக அமையும்.

(ஐம்பாயிர விளக்கம் : திருக்குறட் பாயிரம், தொல் காப்பியப் பாயிரம் கூத்தநூல் பாயிரம், திருமந்திரப்பாயிரம், உபநிசத்துப் பாயிரம் ஆகிய ஐந்து பாயிரவிளக்கங்கள் நூலாக வெளிவரவிருக்கின்றது.)

www.thamizham.net - Free E book No 7522

தமிழ்மொழியில் சொல்லாக்கம்

[ஆட்சித்துறைச் சொற்கள் பற்றி ஆய்வு செய்யும் பேரா. இ. மறைமலை அவர்கள் சொல்லாக்கம் தொடர்பாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களிடம் 20—5—'82 அன்று நேருரை கண்டார். அக்கால் வினவப்பெற்ற வினாக்களும் பாவலரேறு அளித்த விளக்கமான விடைகளும் ஈண்டு இடம்பெற்றுள்ளன.]

வினா — 1 தங்கள்வழிச் செய்யப் பட்ட சொல்லாக்கத்துக்குக் கோட்பாடுகள் வகுக்கப்பட்டனவா? கோட்பாடுகள் பற்றிய, குறிப்பை எங்கே காணலாம்? சுருக்கமாகச் சிலவற்றைச் சொல்ல முடியுமா?

விடை: சொல்லாக்கத் துறையில் ஈடுபடுவோர் மொழியியல், சொல்லியல், ஒலியியல் இவையெல்லாம் அறிந்த பின்னரே சொல்லாக்கம் செய்ய வேண்டும். மொழியியல், சொல்லியல், ஒலியியல் இவையெல்லாம் தெரிந்து சொல்லாக்கத்தில் ஈடுபட்டவர் **பாவாணர்** ஒருவர் மட்டுமே ஆவார். அதற்கு முன்னர் மொழியியல் அல்லது சொல்லியல் அடிப்படையில் ஈடுபட்டவர் **மறைமலை அடிகளும்**, **பாவாணரும் காரத்திகேயனார்**, **பா. வே. மாணிக்கனார்** அறிவியல் அடிப்படையிலும் சொல்லாக்கம் செய்துள்ளார். இந்த வகையில் என்னைப் பொறுத்தவரையில் யான் கையாண்ட அடிப்படைக் கோட்பாடுகள் ஒலியியல், சொல்லியல், சொற்பொருளியல், சொற் பெயர்ப்பு இயல், ஒலிபெயர்ப்பு இயல், வழக்கியல், அறிவியல் இன்னும் ஏரணவியல் (Logic) கோட்பாடுகளே ஆகும். இவ், வகையில்தான், இத்துறையில் என்னைப் பொறுத்தவரை - இக்கோட்பாடுகளின் வழி நின்றுதான் சொல்லாக்கம் செய்யப்பட்டது. சொல்லாக்கத்துறையில் ஈடுபட்ட ஏனையோர் உருவாக்கிய சொற்களையும் ஏற்றுக்கொண்டு எனது தாளிகையில் பயன்படுத்தினேன். எடுத்துக் காட்டாக Helicopter என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் திரு. தமிழநம்பி உருவாக்கிய 'திருகிறக்கை ஊர்தி' என்ற சொல்லையும் Logarithm என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பேட்டைவாய்த்தலை சண்முகம் உருவாக்கிய 'மடக்கை' என்ற சொல்லையும் கூறலாம்.

சொல்லாக்கத் துறையில் ஈடுபட்ட ஏனையோருடைய சொற்களை அவை எத்தகைய அடிப்படையைக் கொண்டு உருவாக்கப் பட்டவை ஆனாலும் அப்படியே ஏற்றுக்கொண்டு "தென்மொழி' இதழ் மூலம் தமிழுக்குக் அறிமுகப்படுத்தினேன். இவை அனைத்தும் சேர்ந்து தான் சொல்லாக்கத் துறையில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. பாவாணர் அவர்கள் இத் துறையில் முழுமையாகச் சிறந்தவர் ஆகையால் அவர் சொல்லாக்க நெறிமுறைகள் என்று சில கோட்பாடுகளைச் சிற்சில இடங்களில் சிற்சில தேவைகளுக்கு வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் அவர்கூட முழுமையாக நிறைவாக எங்கும் அந் நெறி முறைகளை வரையறுத்ததாகத் தெரியவில்லை. எவரால் உருவாக்கப்பட்ட சொற்களாக இருந்தாலும் அந்தச் சொற்களை ஆயும் போது அச்சொற்களின் பின்னணியில் அமைந்துள்ள கோட்பாடுகள் புலனாகும்.

www.thamizham.net - Free E book No 7522

வினா—2 : சொற்களை உருவாக்கும் போதே சுருக்கக் குறியீட்டுச் சொற்களையும் உருவாக்கலாமா? (எ.டு. : பல்லவன் போக்குவரத்துக் கழகம்—பல்லவன்)

விடை : பொதுமக்கள் விளங்கிக் கொள்ளும் திறத்தாலே அவ்வகைச் சுருக்கச் சொற்கள் அமையும். ஆங்கிலத்தில் இத்தகைய சுருக்கச் சொற்கள் (Co-optex போன்றவை) மிகுதி. சுருக்கச் சொற்கள் உருவாக்கப்படவேண்டியன அல்ல. நாளடைவில் பொது மக்கள் வழக்காற்றில் இவை உருவாகும். "அங்ஙனம் உருவாகும் சுருக்கச் சொற்களையே அனைவரும் எளிதில் விளங்கிக் கொள்ள முடியும். "தாமே உருவாகும் சுருக்கச் சொற்களைப் பொருத்திக் கொள்ளலாமா?" என்று வினா இருந்திருக்க வேண்டும்.'ஆம்' என்பதே நமது விடை. நீங்கள் மிகவும் பொருத்தமான ஓர் எடுத்துக்காட்டைக் கொடுத்துள்ளீர்கள். 'பல்லவன்' என்பது பொதுமக்கள் வழக்கில் உள்ள சொல்லன்று. எனவே 'பல்லவன்' என்பதனைச் சுருக்கச் சொல்லாக வழங்க முடிகிறது.

ஆனால் 'அண்ணா போக்குவரத்துக்கழகம்' என்பதனைக் குறிக்கும் வகையில் 'அண்ணா'என்பதைச் சுருக்கச் சொல்லாக வழங்க முடியாது. இதே போலக் 'கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகம்' என்பதன் சுருக்கமாக'கட்டபொம்மன்'என்ற சொல்லை வழங்குவதிலும் சிக்கல் உள்ளது. 'கட்டபொம்ம'னும் 'அண்ணா'வும் ஏற்கனவே வரலாற்றுப் பொருள்பயக்கும் சொற்களாக வழங்கிவந்ததையே இச் சிக்கலுக்குக் காரணம். எனவே, ஏற்கனவே பிறசெய்திகளுடன் தொடர்புடைய ஒரு சொல்லை வேறொரு பொருளில் சுருக்கக் குறியீடாக வழங்குவது சிக்கலை அளிக்கும் என்பது புலனாகிறது. இங்ஙனம் சிக்கல் பயவாத சொற்களை உருவாக்கலாம்; தாமாக உருவாகும் சொற்களையும் ஏற்றுக் கொள்ளலாம்.

வினா—3 'ஆவின்' போன்ற புதுமைச் சொல்வழக்கு தமிழில் பெரிதும் அருகியிருக்கக் காரணம் என்ன? அரசியல், குமுகாய, பொருளியல் சூழ்நிலைகள் காரணமாக இருக்க முடியுமா?

விடை : முதலெழுத்துச் சேர்க்கை, பொருள்தரும் வகையிலும் ஒலிப்பதற்கு இனிமை பயக்கும் வகையிலும் அமைவது தமிழில் மிகக் குறைவு. ஆங்கிலத்தில மிகுதி 'Radar' போன்றவை. 'சுரதா' போன்ற பெயர்ச்சுருக்கங்கள் சில வழங்கிவருகின்றன. நான் கூடப் 'பெருஞ்சித்திரன்' என்பதனைச் சுருக்கி 'பெசின்' என்று குறிப்பிடுவது உண்டு. முதலெழுத்துச் சேர்க்கை தமிழ்ச்சொல் வழக்குக்குப் பொருத்தமாகவும் எளிய வழக்குக்கு உரியதாகவும் அமைய வேண்டும். பொதுப்பணித் துறைக்குச் செல்கிறேன் என்பதனைப் பொ. ப. து. வுக்குச் சொல்கிறேன் என்றோ, மின் வாரியத்திலிருந்து வருகிறேன் என்பதனை மி. வா. விலிருந்து வருகிறேன் என்றோ யாரும் சொல்வதில்லை. Ltd. என்ற ஆங்கிலச் சொல்லின் விரிவாகிய Limited

www.thamizham.net - Free E book No 7522

என்பதனைத் தமிழில் 'மட்டிட்டது' என்று வழங்கிவந்தோம். ஆனால் Ltd. என்னும் சுருக்கச் சொல்லுக்குத் தமிழில் 'அளவரை' என்று புதுச்சேரியில் சிலதனியார் துறைகளும் அவற்றைப் பின்பற்றி அரசுத் துறைகளும் வழங்கிவருகின்றன, 'அளவு வரையறுக்கப்பட்டது' என்னும் தொடரில் இரண்டு சொற்களின் முதலெழுத்துகளின் இணைவால் 'அளவரை' உருவாக்கப்பட்டது. வழக்காறு மிகுதியானால் இவ்வகைச் சொற்கள் பெருகும்.

வினா—4 பிறமொழிச் சொல்லாட்சியில் ஊர்ப்பெயர், நாட்டின் பெயர், மக்களின் பெயர் முதலானவற்றை

அ) மொழிபெயர்ப்பது தகுமா? காட்டாக Oxford என்பதனை எருதந்துறை என்று மொழிபெயர்ப்பது தங்களுக்கு உடன்பாடா?

விடை : உடன்பாடில்லை. அஃது ஒரு குறிப்புப் பெயர். அதனை மொழி பெயர்ப்பது கருத்துகளை நேரடியாக மக்களுக்குச் சொன்னது ஆகாது. நீலமலை' என்பதனை 'Blue Mountain' என்று ஆங்கிலேயர் மொழி பெயர்த்தனரே, நாம் ஏற்றுக்கொண்டோமா?

மலைக்கோட்டை என்பதனை Rock Fort என்றும், கன்னியாகுமரி என்பதனை Cape Comerin என்றும், செங்குன்றம் என்பதனை Red Hills என்றும் ஆங்கிலேயர் மொழி பெயர்த்ததை நாம் ஏற்றுக் கொள்ளாதபோது, நாம் மட்டும் Oxford என்பதனை எருதந்துறை என்று மொழிபெயர்க்கலாமா? கூடாது. இமயமலைக்குக் கூடப் பனிமலை என்னும் மொழிபெயர்ப்பு வழக்கில் உளது. இமய மலையை மொழிபெயர்க்கலாம். Everest-ஐ மொழிபெயர்க்க இயலுமா? அங்ஙனம் மொழி பெயர்த்து வழங்கினால் அறிவியல் வளர்ச்சியை முடப்படுத்துவது ஆகுமே.

ஆ) ஒலிபெயர்த்துக் கொள்ளலாமா?

தமிழில் அந்த ஒலிக்குரிய வரிவடிவம் இல்லாக்கால் ஒத்த ஒலியில் எழுதலாம். ஆனால் அது முழுமையான செய்திக்கு உறுதுணை ஆகாது. காலப்போக்கில் நாமே அதற்கு ஏற்ற வரிவடிவங்களைச் செய்வது வளர்ச்சிக்கு வழிவகுக்கும். அங்ஙனம் ஒலிபெயர்க்கும் போது குறிப்பு ஒலி குறையாமல் அமைந்து சரியான முறையில் பலுக்கப்படவேண்டும். Negro என்பதனை நீக்குரோவர் என்றெழுது வதைக் காட்டிலும் நீக்ரோ, நீக்ரோக்கள் என்றெழுதுவதே சிறப்பு. பிறமொழிச் சொற்களின் ஒலிப்பை நம் ஒலிப்புக்குத் தக்கவாறு மாற்றிவிடக் கூடாது. Stone, Wood போன்ற ஆங்கில மக்களின் பெயர்களாக வழங்கும் குறிப்புப் பெயர்ச் சொற்களை மொழி பெயர்க்கக் கூடாது. Ohms, watt போன்ற உலகெங்கும் ஆட்சியில் உள்ள சொற்களை மொழிபெயர்க்க முயன்றாலோ நம் ஒலிப்புமுறைக்கு ஏற்பத் திரித்து ஒலித்தாலோ அறிவியல் துறைகளில் குழப்பம்

www.thamizham.net - Free E book No 7522

ஏற்பட்டு விடும், 'பை'(π) போன்ற குறியீடுகளை அவ்வாறே வழங்க வேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அறிவியற் சொல்லாக்கக் கருத்தரங்கில் 'செய்திகள் (Substance) தூய தமிழில் இருக்கவேண்டும். அறிவியல், கணக்கியல் குறியீட்டுச் சொற்களை அந்தக் குறியீடுகளாகவே வழங்க வேண்டும். தமிழ் உலகமொழியாகும் போது நாம் குறியீடுகளைக் கண்டுபிடித்து வழக்கிற்குக் கொணரலாம்'' என்று கூறியுள்ளேன். Radar என்பதை ரேடார் என வழங்குவதே சிறப்பு. Lacer Rays என்பதனை தென்மொழியில் குவி ஒளிக் கதிர் என்று குறித்துவந்தோம். அஃது என்ன என்பதனை விளக்கும் பொருட்டே குவி ஒளிக்கதிர் என்ற சொல்லாட்சியை மேற்கொண்டோம். ஆனால் பக்கத்தில் அடைப்புக்குறியில் (Lacer Rays) என்றும் தவறாது குறித்தோம். 'மத்திய பிரதேஷ்' என்பதனை நடுவண் பைதிரம் என்றும் 'நைல்' என்பதனை 'நீல ஆறு' என்றும் வழங்குதல் கல்வி வளர்ச்சிக்குத் துணைபயவாது.

(இ) ஒப்பொலியாக்கம் செய்து கொள்ளலாமா?

விடை: ஒப்பொலியாக்க முறையில் திரு. கி. இராமலிங்கனார் அவர்கள் சில சொற்களை அறிமுகப்படுத்தியுள்ளார். 'Calendar' என்பதனைக் 'காலந்தேர்' என்றும் 'Tutorial College' என்பதனைத் 'தோற்றுரியல் கல்லூரி' என்றும் இவ்வாறு பல சொற்களை அறிமுகப்படுத்தினார். அவற்றுள் சில பொருத்தமுடையவை ஆகலாம்.

ஒப்பொலியாக்கம் செய்வதனால் உருவாகும் சொற்கள் பொருள் பொருத்தம், சொல்லமைப்புப் பொருத்தம், வழக்குப் பொருத்தம், ஒலிப்பொருத்தம் ஆகிய பொருத்தங்களைப்பெற்று விளங்கவேண்டும். கொய்யாபா என்பது ஆலந்துச் (Haland) சொல். (இதனை நான் இலங்கையில் ஆலந்துச் சொல் அகரமுதலியில் கண்டேன்). இது கொய்யாப்பழம் என்று ஒப்பொலியாக்கம் செய்யப்பெற்றுத் தமிழோடு தமிழாகக் கலந்தது. தேநீர் என்ற சொல்லும் அது போன்றதே. இவ்வகையிலேயே ஒப்பொலியாக்கம் அமையவேண்டும்.

வினா—5 தமிழில் சொற்களைப் படைப்பது போல வேர்ச்சொற்களைப் படைக்க இடமிருந்தால்—படைக்கலாமா? படைக்கலாம் என்றால் அதுபற்றி நீங்கள் தெரிவிக்க விரும்பும் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லவும்.

விடை: மொழியின் தோற்றம் குறித்து எனக்கும் பாவாணர்க்கும் அடிப்படையிலேயே இருவேறு கோட்பாடுகள் உள்ளன. 'மொழி, மாந்தன் படைப்பு' என்பது பாவாணரின் கோட்பாடு. 'மொழி, தொடக்கநிலையில் (Preliminary Stage) இயற்கையான வெளிப்பாடு, என்பது எனது கோட்பாடு. தமிழர்கள் மிகத் தொன்மையான நாகரிகம் வாய்ந்த இனத்தவர். இயற்கை நுட்பத்தை உணர்ந்தே

www.thamizham.net - Free E book No 7522

மொழியை ஆக்கியுள்ளார்கள். வேர்ச் சொற்கள் தொடக்கத்தில் இயற்கையாகத் தோன்றிப் பின்னர் மக்களால் பெருக்கிக் கொள்ளப் பட்டன. வேர்ச்சொல்-மூல ஒலியில் வேராக உள்ளது. வேர்ச் சொற்கள் யாராலும் கண்டுபிடிக்கப்பட்டவை அல்ல. அவற்றைப் புதியனவாகப் படைத்தலும் இயலாது. இந்த இடத்தில் வேர்ச் சொற்களுக்கும் மூலச் சொற்களுக்கும் இடையில் உள்ள வேறு பாட்டைக் கூறியாக வேண்டும்

'பிள்' என்பது வேர். இதுமாறாது. மாற்றவும் முடியாது. பிள் என்பதிலிருந்து பிள உருவாகியது. இது மூலம். இந்த மூலம் மாறலாம்.

பிள	—	பிளவு		
பிள	—	பிண	—	பிணவு
		பிண	—	பிணை
		பிண	—	பிணம்

மூலச்சொற்களைப் படைக்கலாம். வேர்ச் சொற்களைப் படைக்கமுடி யாது. தமிழர் நுட்பமான ஒலியமைப்பு உணர்வினராக இருந்ததால் எல்லா வேர்ச் சொற்களையும் உருவாக்கி விட்டார்கள். வேற்றுமொழி, ஒலிகள் அற்றை நிலையில் தோன்றுமலிருந்ததும் அதற்கு ஒரு கார ணம். நெல், தினை, சாமை போன்றவை இயற்கையாகவே அமைந் திருப்பவை. அவை யாராலும் படைக்கப் பட்டவை அல்ல. ஒட்டு முறைகளாலும் ஏனைய அறிவியல் முறைகளாலும் அவற்றின் விளை வுக் காலத்தை மாற்றலாம். விளைபொருட்களின் தன்மையை மாற்ற லாம். தமிழில் உள்ள வேர்ச் சொற்கள் புதிய சொற்களைப் புதிய கருத்தோடு படைக்கப் போதுமானவை. பயிர் வகைகளைப் போல வேர்ச் சொற்கள் இயற்கையானவை. அவை யாராலும் படைக்கப் படுவன அல்ல; காலப் போக்கில் தாமே தோன்றுபவை. ஒட்டுநிலை யில் வேறு சொற்களைப் படைக்க மூலங்களை வேண்டுமானால் புதிய வாகப் படைக்கலாம்.

வினா 6 : ஒரு பொருளுக்கு இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் இருந்தால் அவற்றைத் தரப்பாடு செய்து ஒன்றைத் தேர்ந்தெடுக்க நீங்கள் கூறும் வழிமுறைகள் யாவை?

விடை : மக்கள் தாம் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு சொல், வழக்கில் ஒன்றுவது மக்களின் ஏற்பு நிலையைப் பொறுத்தது — அறிஞர்களைப் பொறுத்ததன்று.

மிதிவண்டியை (Bycycle) நம் நாட்டில் பயன்படுத்தத் தொடங் கிய போது அதற்குத் துவிச்சக்கர வண்டி என்று புலவர்கள் பெய ரிட்டனர். அவருள் தமிழ்ப்பற்றுக் கொண்டவர்கள் ஈருருளி என வழங்கினர். இரண்டு சொற்களுமே வழக்கில் நிலைபெறவில்லை. இவ்

www.thamizham.net - Free E book No 7522

தமிழரின் உண்மைச் சிக்கல் என்ன?

1. தாய்நாட்டில் வாழும் தமிழர்கள் இந்தி மொழியைப் பள்ளிகளில் படிக்கவிட்டாலும், நடுவண் அரசுப் பணிகளில் உள்ளவர்களுக்குத் தனிப்பயிற்சி அளிக்கப்பட்டு இந்தி திணிக்கப்படுகிறது. இதனை எதிர்க்க எவருக்கும் துப்பு இல்லை.

2. இந்த நிலையில் "வானொலி" எனத் தமிழ்ச் செய்தி ஒலி பரப்பின்போது கூறியது எடுக்கப்பட்டு "ஆகாஷ்வாணி" என்ற சமற்கிருதச் சொல் புகுத்தப்பட்டுவிட்டது. இதனைத் தமிழர் தலைவர்களும், தமிழ் மக்களும் வெறுப்பது உண்மை.

3 தாய்நாட்டுக்கு வெளியே இலங்கையில் உள்ள தோட்டத் தொழிலாளத் தமிழர்கள் குடியுரிமை இன்றியும், பலர் ஒப்போலை உரிமை (வாக்குரிமை) இன்றியும் மூன்றுந்தரத்தில் உள்ளனர். இது பற்றி இந்திய அரசும் தமிழக அரசும் தமிழரும் ஏதும் செய்யவில்லை.

4. யாழ்ப்பாண 'விடுதலைப் புலிகள்' சென்னையில் தளை(கைது) செய்யப்பட்டு அடிக்கப்பட்டு இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட உள்ளனர். இலங்கையில் கோடரியால் வெட்டிக் கொல்லப்பட்ட தமிழகத் தமிழனுக்கு இரக்கம் காட்டாத இலங்கை அரசுக்குத், தமிழக அரசு இதில் கையாளாக இருக்க முன்வருகிறது. இந்நிலையில்,

தமிழ்நாடு தனி உரிமை(சுதந்திர) நாடாக ஆகி, இங்கே சமவுடைமை பூக்க வேண்டும்

என்பதைத் தவிர, வேறு என்ன சிக்கல் தமிழர்முன் உள்ளது?

—நன்றி. 'சிந்தனையாளன்' சுவடி 7; ஏடு 32

(முன்பக்கத் தொடர்ச்சி)

வண்டியின் பயன்பாட்டுக்கேற்ப மிதிவண்டி என்று மக்கள் பெயரிட்டு வழங்கினார்கள். அதுவே நிலைத்துவிட்டது.

தொடர் வண்டித் துறைச் சொற்களைப் படைக்குமாறு பாவாணரிடம் கேட்டிருந்தேன். அவரும் அத்துறைச் சொற்கள் முழுமையும் தமிழில் படைத்தளித்தார். அவற்றை நான் வெளிடயிவில்லை. ஏனெனில், அவை

i) நீளமான சொற்கள்
ii) அறிவு நுட்பஞ் சார்ந்தவை.
iii) ஆளுதலும் பலுக்கற்கு அருமைப்பாடுடையவை.

எனவே சுருக்கமான அமைப்புடைய, விளங்கிக் கொள்ளவும், ஒலித்தற்கும் எளிமையான சொற்களே வழக்கில் நிலைபெறும் எனலாம்.

—பெருஞ்சித்திரனார்

www.thamizham.net - Free E book No 7522

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)
மட்டும் பயன்படுத்தப்படும் அளவிற்கு, வெறும் "கூடுதல் மொழியாக" (Additional Language) ஆக்கப்பட்டது. மெய்யான "கூடுதல் ஆட்சிமொழியாக" (Additional Official Language) ஆக்கப்படவில்லை. ஆங்கிலத்தின் அந்நிலையும், அடுத்த ஒரு நாடாளுமன்றச் சட்டத்தின் மூலமாக, எப்போது வேண்டுமானாலும் அகற்றப்பட்டு விடலாம்.

(2) நாடாளுமன்ற நடவடிக்கைகள் அதன் அறிக்கைகள், அதிகார இதழ்கள், நடுவண் அரசு சார்ந்த அமைப்புகளாலும் துறைகளாலும் வெளியிடப்படும் தீர்மானங்கள், நெறிமுறைகள், பொதுக் கட்டளைகள், குறிட்பாணைகள், அறிக்கைகள், ஆட்சி வெளியீடுகள், செய்தியிதழ்க் குறிப்புகள், ஒப்பந்தங்கள் (Contracts), உடன்படிக்கைகள், உரிமங்கள், இசைவுகள், ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் போன்ற நடுவண் அரசின் 16 செயல்களில் மட்டும் இந்தியுடன் ஆங்கிலத்தையும் பயன்படுத்த ஆட்சி மொழி -கள் சட்டம் வகை செய்கிறது.

(3) ஆனால் அவை இந்தி பேசும் மாநிலங்களைக் கட்டுப் படுத்தா; அம்மாநிலங்கள் இந்தியிலேயே இயங்கலாம்.

(4) அரசமைப்புப்படி, இந்தியை வளப்படுத்துவதற்கும், ஆட்சிமொழியாகப் பரப்புவதற்கும், தேவையான கட்டளைகளைக் குடியரசுத்தலைவர் பிறப்பிப்பதையும், செயற்படுத்துவதையும், ஆட்சி மொழிகள் சட்டம் கட்டுப்படுத்தாது.

(5) நடுவண் அரசின் துறைகள் (Departments) வணிக நிறுவனங்கள், அமைச்சகங்கள், கூட்டாளுமங்கள் (Corporations) ஆகியவற்றிற்கிடையே நடைபெறக் கூடிய செய்தித் தொடர்பு களில், அவற்றில் பணியாற்றும் அலுவலர்கள், தம் பணிக்குரிய இந்தி அறிவைப் பெறும் காலம் வரை, ஆங்கில மொழிபெயர்ப்போ அல்லது இந்தி மொழிபெயர்ப்போ முறையே இடம் பெறும்.

இவற்றில் இந்திப் பெயர்ப்பு எதற்கு? ஆங்கில மொழிபெயர்ப்பு மட்டும் போதாதா? அந்த அலுவலர்கள், தேவையான இந்தி, அறிவைப் பெற்று விட்டால், மேற்சொன்ன செய்தித் தொடர்புகளில் ஆங்கில மொழிபெயர்ப்பு இடம்பெறா.

(6) நாடாளுமன்ற நடவடிக்கைகளில் இந்தியுடன் ஆங்கில மும் இடம் பெறும். ஆனால் ஆங்கிலத்தில்தான் அவை முழுதும் நடைபெறல் வேண்டும்; இந்தியில் கூடாது என்ற கட்டாயமில்லை. அப்படி வற்புறுத்தும் உரிமை, இந்திபேசா மாநிலத்தோர்க்கு இல்லை.

(7) இந்தி பேசும் மாநிலங்களுக்கும் நடுவண் அரசுக்கும் இடையில் நிகழ்கின்ற செய்தித் தொடர்புகளிலும், இந்தி மாநிலங்க ளுக்கிடையிலான செய்தித் தொடர்புகளிலும், இந்திதான் இருக்கும்.

www.thamizham.net - Free E book No 7522

(8) இந்தி பேசா மாநிலங்களுக்கும் இந்தி பேசும் மாநிலங்களுக்கும் இடையிலான செய்தித் தொடர்புகள் **இந்தியிலும், ஆங்கிலத்திலும்** இருக்க வேண்டும். அவை விரும்பினால் இந்தியில் மட்டும் இருக்கலாம்.

(9) மேற்சொன்ன வரையறுக்கப்பட்ட அளவிலான ஆங்கில நீட்டிப்பு, இனித் தேவையில்லையென இந்தி பேசா மாநிலங்களின் சட்டமன்றங்களும் இந்திய நாடாளுமன்ற அவைகளும், தீர்மானங்களை நிறைவேற்றும் காலம் வரை, அவ்வகை ஆங்கில நீட்டிப்பு, நடைமுறையில் இருக்கும் என ஆட்சிமொழிகள் சட்டம் பிரிவு-3 (5) கூறுகிறது. இதனைத்தான் **'நேருவின் உறுதிமொழி'** என இப்போதைய இந்தியத் தலைவர்கள் கூறி வருகின்றனர். இவ்வகையில் "நேருவின் உறுதிமொழி" ஆட்சிமொழிகள் சட்டத்தால் வடிவிழந்து விட்டது; சிதைக்கப்பட்டுவிட்டது.

அரசமைப்பால் நெறிப்படுத்த(விதிக்க)ப்பட்டபடி, நடுவண் அரசு இந்தியைக் கட்டாயமாக வளர்ப்பதிலும், பரப்புவதிலும், பயன்படுத்துவதிலும் "ஆட்சிமொழிகள் சட்டமோ" "நேருவின் உறுதிமொழியோ" தலையிட முடியா.

நேருவின் உறுதிமொழி - கண்துடைப்பே!

இந்தி பேசா மாநிலத்தவரின் நயன்மை (நியாயம்) ஆன கோரிக்கைகளை ஏற்கும் வகையில் நடுவண் அரசு, சில சட்டங்களை இயற்றினாலும், அல்லது ஆணைகளைப் பிறப்பித்தாலும், அவை 'இந்தி வளர்ச்சிக்கும் பரப்பீட்டுக்கும்' எதிரானவையாக இருந்தால், அரசியல் சட்டப்படி அவை செல்லாமல் போய்விடும். இந்தியத் தலைமை அறமன்றம் (Supreme Court) இதனைப் பல தீர்ப்புகளில் விளக்கிக் கூறியுள்ளது.

தற்காலிகமாக ஆங்கில நீட்டிப்பைத் தருவது ஆட்சிமொழிகள் சட்டம்; அதுவும் ஒப்புக்கொள்ளத்தக்க அளவில்தான். ஆனால் குடியரசுத் தலைவருடைய (நடுவண் அமைச்சரவையின்) இந்தியைப் பரப்புகிற-வளர்க்கிற ஆணைகளோ, அரசமைப்பின் நெறி (விதி)களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளவை. எனவே அவற்றை, "ஆட்சி மொழிகள் சட்டம்" கட்டுப்படுத்தாது. ஏனெனில் "இந்திதான் (இந்திய) ஒன்றியத்தின் (Union) ஆட்சிமொழி". எனத் தலைமை அறமன்றம், தெளிவாக்குகிறது. எனவே இன்றைய நிலையில் தலைமை அமைச்சர் தரும் வாய்மொழி உறுதிகளும், நேருவின் வாயுறுதியும் வெறும் சொல் வனப்பே; செயல் நிலையன்று.

இனி, நேருவின் வாயுறுதியை அரசமைப்பில் இடம் பெறச் செய்தாலும், ஆட்சிமொழியான இந்தியின் ஆளுமை நிலை அழிந்துவிடாது. அதன் வழி, மாநில மொழிகளும் இந்தியுடன் சமத் தகுதியைப் பெற்றுவிடா; வளர்ந்தும்விடா. ஏன்? மாநில மொழிகள், ஆங்கிலத்தின் தகுதியையும் எய்துவதில்லை; இந்தியின் தனிநிலையையும் பெறுவதில்லை.

www.thamizham.net - Free E book No 7522

இந்தியை, இந்தி பேசா மாநிலங்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ளும் காலம்வரை "குறிப்பிட்ட செயல்களில் மட்டும் உள்ள ஆங்கில நீட்டிப்பு" ஓர் இடைக்கால ஏற்பாடாகத்தான் இருக்கும். அதன் மூலமாக இந்திய நாட்டில் பலமொழித் தேசிய இனங்கள் (Nationalities) சமத்தகுதியையோ, சமநிறையையோ பெற்று விடா. அரசமைப்பில் இந்தி, ஆட்சிமொழித் தகுதியோடு இருப்பதால் இந்தி பேசும் மாநில மக்கள் அனைத்துத் துறைகளிலும் வளர்ந்தோங்கி வருகின்றனர். ஆங்கில நீட்டிப்பைப் பெற்றுக்கொண்ட மற்ற மொழித் தேசிய இனமக்களை அவர்கள் நிலையாக அடிமைப் படுத்தியும் வருகின்றனர்.

நேருவின் உறுதிமொழி, ஆங்கிலத்தை அகற்றும் கால எல்லையை உறுதி செய்யும் உரிமையைத்தான் இந்தி பேசா மாநில மக்களுக்குத் தருகிறது. "இந்தி" "ஆட்சிமொழி" என்ற தகுதியில் வளர்க்கப் படுவதையும், பரப்பப் படுவதையும், தடுத்து நிறுத்துகிற உரிமையைத் தருவதில்லை.

இருமொழிக் கொள்கையில், ஆங்கிலமும் இந்தியும் சமமாக இருப்பதில்லை. இந்தி தவிர மற்ற மொழிகளைப் பேசுவோர் இந்தி தம்மீது திணிக்கப்படாமலிருப்பதற்குக் கேடயமாகப் பயன்படுத்துகிற "வரையறுக்கப்பட்ட ஆங்கில நீட்டிப்பு" காலத்தால் மெல்ல மெல்ல அகற்றப்பட்டுவிடும். ஆனால் இந்தியோ, ஆட்சிமொழி என்ற தகுதியோடு இந்தியா முழுவதும், காலத்தால் வலுவாக நிலைபெற்றுவிடும். எனவே நேருவின் உறுதிமொழி என்பது நடைமுறையில், வெறும் "சமநிலையல்லா இருமொழிக்கொள்கையே" (Unequal Bi-linguism) அதனால் மற்ற மாநில மொழிகள் இந்தியோடு சமநிலையைப் பெறா.

இந்தி பேசா மாநிலங்களின், அகத்தே ஆங்கிலம்; புறத்தே இந்தி; அம் மாநில மொழிகளோ எத்துறையிலும் வளர்வதில்லை; அம் மக்களின் மொழி உரிமையும், தேசிய இனச் சமநிலையும் மெல்ல மெல்லச் சிதைகின்றன.

ஆகவே, "நேருவின் உறுதிமொழியை அரசமைப்பில் இடம் பெறச் செய்" என்ற தமிழகக் கோரிக்கையும், "இந்தியாவை, இந்தி இந்தியா, ஆங்கில இந்தியா-என்ற இரு கூறுகளாக்கி விடு; இந்தி பேசா மாநிலத்தவர் வாழும் 'ஆங்கில இந்தியாவை' மெல்ல மெல்ல ஆனால் நிலையானதாக இந்தி இந்தியாவிற்கு அடிமையாக்கி விடு," என்ற கோரிக்கையும், ஒன்று தான்.

இந்திச் சிக்கலைப் பற்றிய இந்த ஆழ்ந்த உண்மையை அறியாமல் தமிழகத் தலைவர்கள் "நேருவின் உறுதிமொழியை அரசமைப்பில் இடம் பெறச்செய்க'! என்ற முழக்கத்தையே மீண்டும் மீண்டும் கிளிப்பிள்ளை போல, இன்றும் மிழற்றி வருகின்றனர்.

(தொடரும்)

www.thamizham.net - Free E book No 7522

மூலப் பொருளை-எங்கும் நிறைந்த பொருளை - எல்லாம் வல்லதான பொருளை - எல்லாருக்கும் பொதுவான பொருளை-முழுத்துணையை-அஃது இயற்கையாயினும் சரி இறைவனாயினும் சரி வணங்கி, உணர்ந்து வேண்டுகிறேன். ... திருச்சி மாநாடு பற்றிக் கேட்டறிந்தேன். எழுச்சியாக அமைந்தது குறித்து மகிழ்ச்சி. "விடுதலைப் புலிகள்" பற்றித் தாங்களும், நெடுமாறனும் ஆற்றிவரும் பணிகள் குறித்து நன்றியுடன் பெருமைப்படுகின்றேன். உடல் வளமும், நலனும் முதன்மையானவை. நன்கு பேணி வரவும். அப்போதுதான் இன, மொழித் தொண்டு நீண்டகாலம் செய்ய முடியும். பிறபின் வாழ்த்துகள்.

— ப. பத்மநாபன், க. மு; ச. இ. சோமனூர்.

0 : 932 : அழிவுப் பாதையை நோக்கிச் செல்லும் தமிழ் இனத்தையும், மொழியையும் வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் ஒப்பற்ற தலைவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கட்கு, ஐயா! தங்கள் சென்ற மாதத் தென்மொழி கிடைக்கப் பெற்றோம். அதைப் படித்ததும் விடுதலையே கிடைத்து விட்டது போன்ற உணர்வை அடைந்தோம். தமிழின் சிறப்பையும் பெருமையையும், மென்மையாகவும், ஆழமாகவும் எடுத்துரைக்கும் தங்கள் திறனை எப்படி வாழ்த்துவதென்றே தெரியவில்லை. தமிழ் ஈழப் போராளிகளாகிய எங்களைத் தளை செய்ததும், தாங்களும் தங்கள் அன்பர்களும் குரல் கொடுத்ததை முன்னிட்டு நாமும் தமிழ் ஈழ மக்களும் தங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். உங்கள் முயற்சியின் நோக்கம் வெற்றி பெற எனது முழு ஆற்றலையும் வழங்கக் காத்திருக்கும் அன்பன்.

— சிவனேசுவரன், நடுவண் சிறை, சென்னை.
(தமிழீழ விடுதலைக் கழகம்).

0 : 933 : பாவலரேறு ஐயா, வணக்கம். நலம்! நலமே மலர்க! தென்மொழி சுவடி 18; ஓலை 9-ம் தமிழ்ச்சிட்டும் கிடைத்தன. நன்றி. வன்முறை இயக்கம் தேவை என வெறும்பாக்களால் எழுதிக்கொண்டிருப்பது சரியன்று; வன்னெறியாக உங்கள் தலைமையில் உ. த. மு. க. வும், தென்மொழியும் செயலுறும் இயக்கமாக இயங்க வேண்டும். வீரப்பன் வாயடங்க வேண்டும் என்று ஒரு தனியாளைத் திறனாய்வு செய்யத் தலைப்பிட்டு, விளம்பரம் செய்யத் துணிவது கூடாது. ஒட்டுமொத்தமாக ஒழுங்கீனர்களை அழித்துத் தீர்க்குமுகமாக அரசியலாகவே நீங்கள் இயங்கவேண்டும் என நான் பணிவுடன் வேண்டுகிறேன். முகநகைக் குறிப்புச் செய்திகளும், பாராட்டுரைகளும் போர் முகப்பில் நிற்கும் நமக்கெதற்கு? தென்மொழியில் ஏன் அவை வெளியிடப் பெற வேண்டும்?

கழக முதல்வரின் அறிக்கையாகத் தாங்கள் என் உளமுருக், பட்டறிவுடன், மெய்யுரைத்ததற்கும் நன்றி. ஆனால், உங்கள் மன அமைதி கெடவும், உறங்கும் வேளையை வீணாக்காதீர்கள். உறங்க வேண்டிய நேரத்தைச் சரிவரச் செய்து வருவதே நலம். திங்களுக்குப் பத்து நாளைக்கு மேல் ஊர்உலா நிகழ்த்தாதீர்கள். விடிய விடிய இலக்கியம் — எதுவும் பேசுவதால், உங்கள் உடல் நலம் கெடும். ஐம்பது அகவையான உங்களுக்கு 53 அகவை தொடங்கும் எனது பணிவான வேண்டுகோள் இது. தூக்கத்தையும் ஏக்கமாக்கிக் கொள்ளாமல் நாம் இன்னும் துணிவுடைமையைப் பேணுவோம். அடுத்தவர்க்குச் சொல்லும் தகைமையும், தகவுரையும் எனக்குந்தான் உங்களுக்குந்தான். வாழ்க உங்களுள்ளம்!

— இர. ந. வீரப்பன், கிள்ளான், மலேசியா.

www.thamizham.net - Free E book No 7522

0 : 934 ; பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். தங்கள் உடல் நலம் சீர் பெற இறைவனை வேண்டுகிறேன். அண்மையில் தாங்கள் விடுத்த 'புலி'களின் வழக்குத் தொடர்பான அறிக்கையைப் பெரும்பாலான தமிழ் நாளிதழ்கள் வெளியிடவில்லை இருட்டடிப்புச் செய்து விட்டன. நம் கழகப் பெயரைக் காணமுடியவில்லை. கடந்த செவ்வாய் (1-6-82) அன்று பி. பி. சி தமிழ் ஒலிபரப்பில் தென்மொழி அச்சகம் ஆய்வு இடப்பட்டதையும் தாங்கள் விடுத்த அறிக்கையையும் சுருக்கமாகக் கூறினார்கள். (இதிலும் உ. த. மு. க. பெயர் குறிப்பிடப்படவில்லை). அப்பொழுது தங்களைத் தமிழ்ஈழம் அமைய ஆதரவு தெரிவிப்பவர் என்று குறிப்பிட்டனர். (இச் செய்தியைத் தந்தவர் பி. பி. சி. செய்தியாளர் சாம். இராசப்பா சென்னை.)

— சீனி. வாசுதேவன், அனுப்பப்பட்டி. (கோவை.)

0 : 935 : மதிப்பிற்குரிய பாவலரேறே! வணக்கம். 15-5-82ஆம் பக்கலிலும் 1-6-82-ஆம் பக்கலிலும் 'உண்மை' இதழ்களில் வெளி வந்த தங்களின் நேருரை (பேட்டி)யைக் கண்டு நனி மிக மகிழ்வுற்றேன். தேனிகர்த்த கருத்துகள். வானிகர்த்த உளக்கிடக்கை. இந் நேருரையை—'உண்மை'யைப்—படிக்காதவர்கள் படிக்க வேண்டும். அத்துடன், தங்கள் குடும்பப் படத்தைக் கொடுத்த உமக்கும் அதனை வண்ணமுற அச்சிட்ட உண்மை இதழுக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!! நேரில் காணும் பேறமையா என் போன்றோர்க்கு நேருரையையும் படத்தையும் கண்டவுடன் மழையினைக் காணுதிருந்த நிலம் மழையினைக் கண்டது போல் குளிர்ந்தது.

— வி. வில்வநாதன், தூரவாணிநகர், பெங்களூர்-16.

0 : 936 : அன்பின் ஐயா! ... தமிழ் மொழி, இன, விடுதலைக்கு ஒரு நல்ல காலம் வந்து விட்டது என்று கருதுகின்றேன். அதற்கான கால் கோள் நாட்டப்பட்டு விட்டது. தமிழ்நாட்டில் இப்போது நடந்து வரும் சில நிகழ்ச்சிகள் அதை எண்பிப்பனவாக உள்ளன. என் கணிப்பு சரியோ அன்றித் தவறோ, நீங்களும காலமுந்தாம் விடை சொல்ல வேண்டும்.

"எந்தமிழர் விழித்தெழுந்தார் எடுத்தவினை
முடித்திட்டார்; இநுனைச் சீபத்தார்"

என்ற தங்களின் பாடல் அடிதான் நினைவிற்கு வருகின்றது.

— மெய். அருண்மொழியன், கடல் மீன்வளம்.

0 : 937 : தனித்தமிழை உலகத்தே கொடுக்கும் வேந்தே!
தண்டமிழர் பெருஞ்சித்திரத் தமிழே, நீவிர்
அனிச்சமலர் போல்தூய நெஞ்சம் பெற்றீர்!
அரிமாவும் யானையுடை வலிமை கொண்டீர்!
முனைத்தபணி செய்கின்ற முதல்வா உன்னால்
முழுமைத்தமிழ் நிறைந்தமதி வளரும் சொன்னேன்
பனித்துளியாம் தனித்தமிழின் தன்மை போன்று
பண்புடைய நறுந்தமிழே நெடிய வாழி!

— கோவி. இளஞ்சேரன், விழுப்புரம்.
(உ.த.மு.க. விழுப்புரம் [illegible] தலைவர்.)

www.thamizham.net - Free E-book No 7522